





# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT 2013

**ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

**National Child Protection Authority**

**කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය**

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

**Ministry of Women & Child Affairs**

# வருடாந்த ஆண்டறிக்கை

# 2013

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## நோக்கு

சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ளதும்

பாதுகாப்பு மிக்கதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்

## பணி

சிறுவர்கள் எல்லா விதமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் சுதந்திரமானவர்கள் என்பதை உறுதிப்படுத்தல்



## சிறுவர் அபிவிருத்தி பெண்கள் அலுவல்கள் அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியத்த அவர்களின் செய்தி

சிறுவர் பாதுகாப்பு, பேணல் மற்றும் அபிவிருத்தியின் பால் பெரும் பணியாற்றி வரும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2013ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு செய்தியொன்றை விடுப்பதில் நான் பெரும் மகிழ்வடைகின்றேன்.

தற்போதைய சிக்கல் மிகுந்த, சமூக அமைப்பின் கீழ் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்காக பணியாற்றுதல் என்னும் விடயம் சவால் மிகுந்ததொரு பணியாகவே அமைகின்றது. இவ்விடயத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் மிக அர்ப்பணிப்புடன் இப்பணிகள் ஈடேற்றப்பட்டுள்ளன என்பதை இவ்வறிக்கையை ஆராயும் பொழுது தெளிவாக புலனாகின்றது.

தமது அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும், பணிகளையும் குறைவின்றி நிறைவேற்றுவதற்காக இது வரை காலம் பிரதேச செயலக மட்டத்தில் வெற்றிடம் நிலவிய பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதவிக்கு 360 பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை மகிழ்ச்சி தரும் ஒரு விடயமாகும்.

மேலும், தற்போதைய சமூகத்தில் ஒழிவுமறைவாக இருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் சார்ந்த நிலமைகளையும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களை சட்டத்தின் பிடியில் சிக்க வைப்பதற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பல்வேறு சமூக மட்டங்களை ஆராய்ந்தறிந்து விழிப்புணர்வூட்டும் பல நிகழ்ச்சித்திட்டங்களை இவ்வருடத்திலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும்.

சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பேணல் நடவடிக்கைகளுக்காக தற்போது அமுலிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை மென்மேலும் கருத்தாழம் மிக்க வகையிலும் நடைமுறை சாத்தியமான வகையிலும் மேற்கொண்டு ஒவ்வொரு வருடமும் பல புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நிறைவேற்றப்படும் தேசிய கடமைப்பொறுப்பானது மெய்ச்சத்தக்கதாகும்.

மேலும் விடயப்பொறுப்பு அமைச்சரென்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பொறுப்புக் களையும் வழிகாட்டல் நடவடிக்கைகளையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன் என இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இவ் விடயத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் எனக்கு வழங்கப்படும் ஒத்துழைப்பினைப் பாராட்டும் அதே சமயம் பாதுகாப்பானதொரு சிறுவர் சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கு அயராது பணியாற்றி வரும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் இவ்விடயத்தை மிகவும் சிறப்பான முறையில் ஈடேற்றுவார்கள் என நான் பெரிதும் நம்புகிறேன்.

2014.12.20

**திஸ்ஸ கரலியத்தே, பா.உ.**

சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார அமைச்சர்

சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார அமைச்சு



# சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் செய்தி

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்கு செய்தியொன்றை விடுப்பதில் நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

நாட்டின் சிறுவர்கள் எந்தவித துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகாத வகையிலான சமூக கலாசாரம் ஒன்றை கட்டியெழுப்புவது எம் அனைவரினதும் கடப்பாடாகும். அப்பொறுப்பினை நிறைவேற்றும் பணியில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனது பணிக் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் கீழ்மட்டத்தில் இயங்கி வரும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னோடியான பணிகளில் ஈடுபடுவதற்கும் தேசிய சிறுவர் அதிகார சபைக்கு ஆற்றல் கிட்டியிருக்கின்றமையை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

குறிப்பாக நாடொன்றில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பணியானது சவால் மிகுந்ததொரு பணியாகவே அமைகின்றது. ஏதேனும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய பாதிக்கப்பட்ட பிள்ளைகள் சமூகத்தில் மீண்டும் இணைந்து கொள்கின்ற பொழுது அவர்கள் சமூகத்தில் மாறுபட்டதொரு நடத்தைக்கு உள்ளாவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. இந்நிலையை இயன்றளவு குறைப்பதற்கு பாதிக்கப்பட்ட சிறுவர்களை முறைசார்ந்த வகையில் சமூகத்தில் ஒருங்கிணைப்பதற்கு தேவையான உளவள ஆலோசனை வழங்கும் நடவடிக்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

24 மணித்தியாலங்களும் மும்மொழிகளிலும் இயங்கும் 1929 எனும் இலக்கமுடைய இலங்கை சிறுவர் தொலைபேசிசேவையினூடாக சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளை மிகவும் துரிதமாகப் பெற்று அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் விசேடமானதொரு பணியாகும்.

2013 ஆம் ஆண்டில் ''தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை'' வெளியிடுவதற்கும் நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ள பிள்ளைகளின் உச்சமட்ட நன்மையை உறுதிப்படுத்துவதற்கும் ''சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டிகளும் தரங்களும்'' உள்ளடக்கப்பட்ட வரைபினை வெளியிடுவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 2013 ஆம் ஆண்டில் வாய்ப்புக்கிட்டியது. இவ்விடயம் நாட்டில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பிற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமானதொரு விடயம் என குறிப்பிட்டே ஆக வேண்டும்.

நாட்டில் உள்ள அனைத்து சிறுவர்களையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பினை மிகவும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்வதற்கு சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார அமைச்சு மிகவும் பொறுப்புணர்வுடன் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட பணியாட்களுக்கு மனோவலிமையும் ஆற்றலும் கிட்டவேண்டுமென பிராத்திக்கின்றேன்.

2014.12.10
**எரிக் இலயப்ஆராச்சி,**
செயலாளர்,
சிறுவர் பாதுகாப்பு பெண்கள் விவகார அமைச்சு.

## கௌரவ தவிசாளரின் செய்தி



நாடொன்றின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் மிகவும் பலம் வாய்ந்ததும் தீர்க்கமானதுமான காரணியாக சிறுவர்களே அமைகின்றனர். தற்போது இலங்கை அபிவிருத்தியின் உச்சநிலையை நோக்கி பயணம் செய்து கொண்டிருப்பதுடன் அதற்கு ஒத்த வகையில் நாட்டில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். ஆகவே இவர்களை அனைத்து விதமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் பாதுகாப்பதற்கு பணியாற்றும் முன்னணி அரச நிறுவனமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த பாரிய சவாலுக்கு முகம் கொடுத்து 2013 ஆம் ஆண்டில் புதிய நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி ஒழுங்குமுறை சார்ந்ததாகவும் வினைத்திறன் மிக்கவகையிலும் நாட்டிலுள்ள சிறுவர்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

குறிப்பாக இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு சார்ந்த வரலாற்றில் புதியதொரு திருப்புமுனையை மையப்படுத்தும் வகையில் 2013ஆம் ஆண்டில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக 360 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் உத்தியோகத்தர்களில் 212 பேர் அவ்வருடத்திற்குள்ளேயே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். மேலும், சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய சில ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் இவ்வருடத்தில் அதிகாரசபைக்கு ஆற்றல் கிட்டியது. மேலும், வஞ்சக்கடத்தலுக்கு எதிராக சட்டங்கள் செயலூக்கம் அற்ற வகையில் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஆராய்ச்சி சார்ந்த ஆய்வுகளும் பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற உளவள ஆலோசனை சேவைகளின் தரம் பற்றியும் ஆய்வுகள் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உச்சமட்ட நன்மைக்காக (சுரகி பியச) எனும் சிறுவர் பாதுகாப்பு நிலையமொன்றை மேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் முழுமையான தலையீட்டுடன் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை வரைபொன்றை வெளியிடுவதற்கு ஆற்றல் கிட்டியமையும் இவ்வருடத்திற்குள் நாங்கள் பெற்றுக்கொண்டதொரு வெற்றியாகும். நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்களின் உச்சமட்ட நன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு “சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டிகளும் தரங்களும்” உள்ளடக்கப்பட்ட வரைபையும் வெளியிடுவதற்கு 2013 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர், இளைஞர் கட்டளை சட்டத்தை திருத்துவதற்கான விதப்புரைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு சமர்ப்பிப்பதற்கும் இவ்வருடத்தில் எமக்கு ஆற்றல் கிட்டியது. மேலும் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை சிறுவர் நேயம் மிக்கதொரு அணுகுமுறையாக மக்களுக்கு மிகவும் நெருங்கி இவ்வருடத்தில் செயலாற்றியது.

மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான நோக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “மல்வன் தருவன்” எனும் மலர்களைப் போன்ற பிள்ளைகள் எனும் பொருளுடைய எண்ணக்கருவிற்கேற்ப நாட்டில் உள்ள சிறுவர்களுக்காக சிறுவர் நேயமிக்கதும் பாதுகாப்பானதுமான சூழமைவொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இடையறாது பாடுபட்டு 2013 ஆம் ஆண்டிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிகளை வெற்றிகரமாக ஈடேற்றுவதற்கு தொடர்ச்சியாக ஊக்கத்தையும் ஆலோசனைகளையும் வழங்கிய மேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எனது மரியாதையையும் நன்றியையும் தெரிவிக்க விரும்புகின்றேன். நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பணியில் சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியத்தே அவர்களிடம் இருந்தும் அமைச்சரின்

செயலாளர் எரிக் இலயப்பாராச்சி அவர்கள் உள்ளிட்ட அவ்வமைச்சின் உத்தியோகத்தர்களிடம் இருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பினை பெரிதும் பாராட்டுகின்றேன்.

மேலும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை மற்றும் தலைமைச் சபை, அதிகார சபையின் பிரதித் தலைவர் சட்டத்தரணி திருமதி சுஜாதா குலதுங்க அவர்களிடம் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்பினையும் நான் இங்கு நன்றியறிதலுடன் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

சிறுவர்கள் சார்பில் பணியாற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து எமக்கு கிடைக்கும் பங்களிப்பு உண்மையிலேயே மெச்சத்தக்கதாகும். மேலும் பல ஊடக நிறுவனங்கள் எவ்வித நிதி செலுத்துகைகளும் இல்லாமல் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை இலக்கத்தை பிரபல்யப்படுத்துவதற்காக வழங்கிய ஒத்துழைப்பினையும் பெரிதும் பாராட்டுவதுடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணியாட்களிடம் இருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பினையும் பாராட்டுகின்றேன். எவ்வித துஷ்பிரயோகங்களும் இல்லாத வகையில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுவதற்கு இச்சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

2014.10.20

**சட்டத்தரணி, அனோமா திசாநாயக்க**

தலைவர்,

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை



# பிரதித் தலைவரின் செய்தி

தற்போதைய சமூகத்தின் பாரதூரமான சமூகப் பிரச்சினையாக பரவிவரும் விடயமாகிய சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் எம் அனைவரினதும் பொறுப்பும் கடப்பாடுமாக அமைகின்றது. இப்பணியை ஈடேற்றும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை 2013 ஆம் ஆண்டில் நாட்டில் உள்ள சிறுவர்களை பாதுகாக்கும் பொருட்டு பாரிய பல பணிகளை நிறைவேற்றி யுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் ஒரு முறையாக சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயங்களை பற்றி விழிப்புணர்வூட்டுதல் முக்கியமானதாக அமைகின்றது. இவ்விடயத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கீழ்மட்டம் முதல் நாட்டில் உள்ள சிறுவர்களை அனைத்து விதமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு விழிப்புணர் வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது. குறிப்பாக சிறுவர்களுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களாகிய சுகாதாரதுறை சார்ந்த தொழில் வாண்மையாளர்கள் கல்வியல் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரிய, மாணவர்கள் ஆகியோரை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக சிறுவர் நேயமிக்க சூழல் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு தேவையான பின்னணியொன்று உருவாக்கப் பட்டது.

பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களின் கீழ் உளவள ஆலோசனை ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டும் விடயமும் கிரமமான முறையில் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல் சமூகத்தினால் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும். இவ்விடயத்தில் குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகங்களை அறிக்கையிடும் ஊடகங்களின் பாவனையானது மிகவும் பயனுறுதி உள்ள மட்டத்தில் பேணி வருதல் வேண்டும். இது சம்பந்தமாக எமது அதிகார சபை சிறுவர் பாதுகாப்பு பற்றி ஊடகங்களுக்கு கூறுணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதுடன் ஊடகவியலாளருக்கு ''வழிகாட்டல் கைநூல்'' ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

2005 ஆம் ஆண்டின் 16ம் இலக்க சுனாமி (விடேச ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சுனாமி பேரழிவுக்கு முகம் கொடுத்த பாதுகாவலர்களை இழந்த பிள்ளைகளுக்கு பாதுகாவலர்களையும் நலனோம்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு இவ்வருடத்தில் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆற்றல் கிட்டியது.

2013ம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு தொடர்ச்சியாக ஊக்கத்தையும் ஆலோசனையையும் வழங்கிய மேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களையும், இப்பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு எம்மை நெறிப்படுத்திய சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியத்தே அவர்களையும், அமைச்சின் செயலாளர் எரிக் இலயப்ஆராச்சி அவர்களையும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை சரியான தடத்தில் வழிநாடாத்தி வரும் தேசிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க அவர்களையும், இச்சந்தர்ப்பத்தில் நன்றியறிதலுடன் நினைவுபடுத்துகின்றேன். மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினாலும் தலைமை சபையினாலும் கிடைக்கும் ஒத்துழைப்புக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் எனது நன்றியறிதலை தெரிவிப்பதுடன் அதிகாரசபையின் பணியாட்களிடம் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பின் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு மாத்திரம் அனைத்து பணிகளையும் ஈடேற்ற முடியாதென்பதுடன் ஒட்டுமொத்தமான சமூகமே நேரடி பங்களிப்பினை வழங்கி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இப்பணியில் கைகோர்த்துக் கொள்ளுமாறு அனைவருக்கும் அன்புடன் அழைப்பு விடுக்கின்றேன்.

2014.10.20

**சட்டத்தரணி சுஜாதா குலதுங்க**
பிரதித் தலைவர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## 2013 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| சட்டத்தரணி திருமதி அனோமா திசாநாயக்க | தலைவர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர. |
| சட்டத்தரணி திருமதி சுஜாதா குலதுங்க | பிரதித் தலைவர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர. |
| கலாநிதி திருமதி சமுத்ரா கத்திர ஆராச்சி | விசேட மனநல மருத்துவ நிபுணர்,<br>மனநல மருத்துவப் பிரிவு,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,<br>நுகேகொட. |
| பேராசிரியர் திருமதி மனோரி சேனாநாயக்க | சிரேஷ்ட குழந்தை நலன் மருத்துவ நிபுணர்,<br>மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்,<br>கொழும்பு 7. |
| வைத்தியர் திரு. பீ.பீ. தசநாயக்க | சட்ட வைத்திய அதிகாரி,<br>நச்சியல் மற்றும் சட்ட மருத்துவ நிருவனம்,<br>111 பிரான்சிஸ் மாவத்தை,<br>கொழும்பு 10. |
| வைத்திய கலாநிதி திரு டீ.ஸ்வீந்ரன் | மனநல வதைத்திய நிபுணர்,<br>6, பெரேரா மாவத்தை,<br>கொழும்பு 10. |
| திரு.பீ.பீ.அலுவிஹாரே | பிரதி மன்றாடியதிபதி,<br>சட்டமா அதிபர் திணைக்களம்,<br>கொழும்பு 12. |
| திருமதி யமுனா பெரேரா | ஆணையாளர்,<br>சிறுவர் நன்நடத்தை, பாதுகாப்பு திணைக்களம்,<br>இல. 60. எஸ்.எஸ் ஜயசிங்க மாவத்தை,<br>கொஹுவல |
| திருமதி பர்ல் வீரசிங்க | தொழில் ஆணையாளர் நாயகம்,<br>தொழில் திணைக்களம்,<br>கொழும்பு 05. |
| திருமதி. ஆர்.கே.ஜீ. டி விஜேசிங்க | பணிப்பாளர்,<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்,<br>நிதி, திட்டமிடல் அமைச்சு,<br>தலைமைச் செயலகம்,<br>கொழும்பு 1. |
| திருமதி. சிரோமி மாசகோரால | உறுப்பினர்,<br>4/10 வெலிகட வத்த,<br>நாவல வீதி,<br>ராஜகிரிய. |
| திருமதி. பீ. எம். அபேகோன் | உறுப்பினர்,<br>304 பௌத்தாலோக மாவத்தை,<br>கொழும்பு 07. |
| திரு.ஆசோக விஜேதிலக | சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்,<br>சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம்,<br>குருநாகல். |

**2013 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பேரவை அங்கத்தவர்கள்**

| | |
|---|---|
| திருமதி அனுஷா ஏ. முனசிங்க | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>நீதிஅமைச்சு,<br>கொழும்பு 12. |
| திருமதி. ஆர். எம். ஐ. ரத்நாயக | மேலதிக செயலாளர்,<br>பாதுகாப்பு அமைச்சு,<br>பாலதக்ஷ மாவத்தை,<br>கொழும்பு 03. |
| திருமதி. கே. டப்ளியூ. டி. என். அமரதுங்க | மேலதிக செயலாளர்,<br>வெகுசன ஊடக, தகவல் அமைச்சு,<br>இல.163 கிருலபன மாவத்தை,<br>பொல்ஹேன்கொட,<br>கொழும்பு 05. |
| திருமதி எம். ஏ. எம். அரிபா | ஆணையாளர்,<br>மகளிர், சிறுவர் அலுவல்கள் பிரவு,<br>தொழில் திணைக்களம்,<br>கொழும்பு 05. |
| திருமதி ஹேமா தர்மவர்தன | மேலதிக செயலாளர்,<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,<br>இல, 464 டி.பீ ஜயா மாவத்தை,<br>கொழும்பு 10. |
| திருமதி யூ. எஸ். கே. தெனாவத்த | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,<br>இல 330 யூனியன் பிளேஸ்:<br>கொழும்பு 02 |
| திருமதி டி. எஸ் விஜேசேகர | மேலதிக செயலாளர்,<br>சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு,<br>இல.175, ஏ. நாவல வீதி,<br>நுகேகொட. |
| திரு. கே. வீ. டீ. சி. விமலசிறி | மேலதிக செயலாளர் (பரிபாலனம்),<br>சுகாதார, போசாக்கு அமைச்சு,<br>இல.385. வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,<br>கொழும்பு 10. |
| திரு. எம். சி. எல். பர்னாந்து | மேலதிக செயலாளர்,<br>சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சு,<br>செத்சிரிபாய,<br>பத்தரமுல்ல. |
| திரு. எச். யு. பிரேமதிலக | மேலதிக செயலாளர்,<br>கல்வி அமைச்சு,<br>இசுருபாய,<br>பத்தரமுல்ல. |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01 |
| சிறுவர்களுக்காகவே செயற்படும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கடமைப்பணி | 02 - 03 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உப பிரிவுகள் | 03 |
| சிறுவர்களுக்காக நாங்கள் நாடளாவிய ரீதியில் | 04 |
| 2013 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கட்டமைப்பு | 05 |
| சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் அனைத்து விடயங்களையும் செய்கின்றோம் | 06 |
| மலர்களைப் போன்ற சிறுவர் வாழ்க்கையை பாழாக்கும் 4 காரணிகள் | 07 |
| துஷ்பிரயோகிகளுக்கு சிறுவர்களை நெருங்குவதற்கு இடமளியோம் அவர்களிடம் இருந்து பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்வோம் | 08 |
| மகிழ்ச்சி ததும்பும் சிறுவர் உலகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான எமது பணிகள்…….. | 09 |


**அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**


| | |
|---|---|
| 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை | 09 - 10 |
| பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் | 11 - 13 |
| சிவில் ஒழுங்கமைப்புகளை சார்ந்த உறுப்பினர்களையும் பெருந்தோட்டத்துறை சார்ந்த சமுதாயத்தையும் விழிப்புணர்வூட்டுதல் | 13 - 14 |
| பொலிஸ் உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல் | 15 |
| சுகாதாரத்துறை தொழில்வாண்மையாளர்களையும் அதனுடன் இணைந்த சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களினதும் திறன்களை விருத்தி செய்தல் | 15 - 16 |
| தேசிய கல்வியல் கல்லூரிகளிலுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல். | 16 - 17 |
| கர்ப்பிணித் தாய்மாரை விழிப்புணர்வூட்டுதல் | 17 - 18 |
| பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் சார்ந்த அறிவூட்டல் | 18 |
| பெற்றோருக்கு விழிப்புணர்வூட்டல் | 18 - 19 |
| சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டல் | 19 |
| இளைஞர் குழுக்களை அறிவூட்டுதல். | 20 |
| சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 20 - 21 |
| சுனாமி பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு புனர்வாழ்வளித்தலும் நலனோம்புகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் | 22 |
| சுரக்னா கெபகரு பாதுகாப்பு முறைமை | 22 - 23 |
| சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக ஊடகங்களை கூருணர்வூட்டுவதற்கான செயலமர்வு | 23 |
| சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தேசிய தினம் | 23 |
| சிறுவர் ஊழியத்திற்கு எதிரான உலக தினம் | 24 |
| தகவல்களை வழங்குதல் | 24 |
| சிறுவர் பாதுகாப்பு சார்ந்த தகவல்களை ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு எடுத்துச்செல்லுதல் | 25 |
| கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல் | 25 |
| லபெந்தி செய்தி மடல் | 26 |
| அகில இலங்கை சிறுவர் சித்திரைப்போட்டி 2013 | 26 |
| உள சமூக நிகழ்ச்சித்திட்டங்கள் | 27 |

| | |
|---|---|
| பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளசமூக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல் | 27 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்புக்கு ஏற்புடைய பல்வேறு தலைப்புகளையொட்டி ஆய்வுகளை நடாத்துதல் | 28 |
| திரிதரு சுரக்கும் பியச வள நிலையத்தைப் பேணி வருதல் | 29 |
| சிறுவர் மைய நிலையங்கள் | 29 |
| சுரகி பியச சிறுவர் பாதுகாப்பு நிலையம் | 29 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை வரைபினை வெளியிடுதல் | 29 - 30 |
| சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல்களும், தரங்களும் உள்ளடக்கப்பட்ட வரைவினை வெளியிடுதல் | 30 |
| 1939 ஆம் ஆண்டின் 048 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் ஆட்களுக்கான கட்டளைச் சட்டத்தின் திருத்தங்கள் பற்றி எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | 30 |
| விசேட பொலிஸ் விசாரணை | 30 - 31 |
| துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்தல் | 31 |
| சிறுவர் துஷ்பிரயோகம் சார்ந்த வழக்குகளுக்கான மரபணு பரிசோதனை | 31 |
| சட்ட நடவடிக்கைகள் | 32 |
| சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் | 33 |
| ஆண்டிறுதி வருமான மற்றும் செலவினக் கூற்று | 35 - 37 |
| கணக்காய்வு அறிக்கைகள் | 38 - 49 |

# அறிமுகம்

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு உலகத்தின் பல்வேறு அமைப்புகளும் அரசுகளும் ஒன்றுதிரண்டதின் விளைவாக 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் அனைத்துலக பிரகடனமாக அங்கீகரிக்கப்பட்டது. இப்பிரகடனம் 54 வாசகங்களை கொண்டுள்ளதுடன் அதனூடாக அனைத்துலக மட்டத்தில் எவ்வித மாற்றமுமின்றி அனைத்து சிறுவர்களுக்கும் உரித்தாகவேண்டிய உரிமைகளும் அந்த உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுகளுக்குள்ள கடப்பாடுகளும் விவரிக்கப்பட்டுள்ளன. சிறுவர் உரிமைகள் சம்பந்தமான சமூக நிலைகளை ஆராயுமிடத்து காணப்படும் சிறுவர் உழைப்பினை பயன்படுத்துதல், சிறுவர் வியாபாரம், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல், மற்றும் அவர்களை ஆபாச திரைப்படங்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியவற்றிற்கு ஈடுபடுத்துதல் போன்றவற்றினால் சிறுவர்களின் அபிவிருத்திக்கு பெருமளவு தாக்கம் ஏற்படுகின்றதென காணக்கூடியதாக உள்ளது. இதன் விளைவாக 2000 ஆம் ஆண்டில் துணை வரைபாக சிறுவர்களை ஆயுதப்போராட்டங்களில் ஈடுபடுத்திக்கொள்வதை தடுத்தல், சிறுவர் வியாபாரம், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல், மற்றும் அவர்களை ஆபாச திரைப்படங்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியவற்றிற்கு ஈடுபடுத்துதல் ஆகியவை சிறுவர் உரிமைகள் பிரகடனத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளன.

உலகிலுள்ள இந்த போக்குகளுடன் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சம்பந்தமான பிரகடனத்தை 1991 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டு தனது இணக்கத்தை தெரிவித்தது. அதற்கேற்ப இலங்கைக்குள் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை விதந்துரைத்தல் சம்பந்தமாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய ஜனாதிபதி செயலணியொன்று நிறுவப்பட்டது. அச்சந்தரப்பத்தில் விடயங்களை ஆராய்ந்த அச்செயலணி சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு தத்துவம் கொண்ட அரச நிறுவனமொன்றின் தேவை சம்பந்தமாக விதப்புரைகளை சமர்ப்பித்தது. இதற்கேற்ப 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அதற்கு ஏதுவான உரிய நடவடடிக்கைகளை மேற்கொள்ளுதல் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மீண்டும் சமூகத்தில் ஒருங்கிணைப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய விடயங்களின் பால் செயலாற்றி வருகின்றது.

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் தத்துவங்களை பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் மேம்பாட்டுக்காக 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகாரசபைக்கு இதற்கான தத்துவங்கள் கிடைத்துள்ளன. மேலும், 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க வீட்டு வன்முறையை தடுத்துநிறுத்தும் சட்டத்தின் மூலம் பிள்ளையொன்று வீட்டு வன்முறைக்கு உள்ளாகும் போது அதிகாரசபைக்கு அதனை அறிக்கையிடவும் மூன்றாம் தரப்பாக அவ்விடயத்தில் தலையிடவும் வாய்ப்பிருக்கின்றது.

சிறுவர்களின் உச்சமட்ட நன்மையை கருத்திற்கொண்டு செயற்படுவதற்காக சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயங்களை துரிதமாகவும் முறையாகவும் அறிக்கையிடுதல் சம்பந்தமாக செயற்படுவதற்கு 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி "1929" எனும் இலங்கை சிறுவர் உதவி தொலைபேசி சேவையினை 24 மணித்தியாலமும் செயற்படுத்தும் பொருட்டு இச்சேவை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வளவிலேயே நிறுவப்பட்டுள்ளது. இந்த தொலைபேசி சேவை இலங்கை சிறுவர் பாதுகாப்பு முறைமையில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைவதுடன் இது தென் ஆசிய நாடுகளிலுள்ள மிகவும் முக்கியமான சிறுவர் தொலைபேசி சேவையாக நடைமுறைப்படுத்துவதற்கும் எமக்கு ஆற்றல் கிட்டியுள்ளது. இத்தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டதுடன் சமூகத்தில் ஒளிவுமறைவாக இருந்த சிறுவர் துஷ்பிரயோகங்கள் வெளிச்சத்திற்கு வருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தற்போது நாடு தழுவிய வகையில் அனைத்து மாவட்டங்களையும் உள்வாங்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன் இச்சேவையை வெறுமனே முறைப்பாடு செய்வதற்கு மாத்திரமின்றி உளவள ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். தற்போது இத்தொலைபேசிச் சேவை மக்களுக்கு மிகவும் நெருக்கமான சேவையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கடமைப்பணி**

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல், அவ்வாறான துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்ற பிள்ளைகளை பாதுகாத்தல் மற்றும் இவர்களுக்கு சிகிச்சையளித்தல் பற்றிய தேசிய கொள்கையொன்றை ஆக்குவதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்
- அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றவர்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு சிறுவர்களுக்குரிய உரிமைகள் பற்றியும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்குரிய முறைகள் பற்றியும் விழிப்புணர்வூட்டுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் நடவடிக்கைகளுக்காகவும் அவ்வாறான துஷ்பிரயோகத் திற்கு உள்ளாகுபவர்களை பாதுகாப்பதற்காகவும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் உரிய சந்தர்ப் பங்களில் அப்பணிக்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களிடமிருந்தும் அரச மற்றும் தனியார்துறை சார்ந்த நிறுவனங்களினதும் ஆலோசனையை வினவுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக தேசிய கொள்கையை விளைத்திறன்வாய்ந்த வகையில் செயற்படுத்துவற்கு தேவையான சட்ட, நிருவாக அல்லது வேறு திருத்தங்களை பரிந்துரைத்தல்.
- அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகங்களுடனும் தொடர்புடைய சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை ஒழுங்குபடுத்துதல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய அனைத்து புலன் விசாரணைகளையும் குற்றவியல் வழக்குகள் சம்பந்தமான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் ஒழுங்குபடுத்துதல்.
- ஆயதப் போராட்டங்களின் தாக்கத்திற்கு உள்ளாகிய பிள்ளைகள் சம்பந்தமாக மனிதாபிமான ரீதியில் கருத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றிய நடவடிக்கைகளை விதந்துரைத்தல் மற்றும் அவர்களின் உடல் மற்றும் உள நலன்களுக்கான விடயங்கள் உள்ளிட்டதாக அவ்வாறான பிள்ளைகளின் பாதுகாப்பு பற்றிய விடயங்களை கையாளுதல் மற்றும் அவர்களை மீண்டும் சமூகத்தில் ஒருங்கிணைத்தல்
- குற்றச்செயல்கள் சம்பந்தமான புலன்விசாரணைகளுடனும் குற்றவியல் வழக்குகளுடனும் தொடர்புடைய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பேணல் சம்பந்தமாக தேவையான சந்தர்ப்பங்களில் உசிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான பொதுமக்களின் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளுதலும் தேவையான சந்தர்ப்பங்களில் அம்முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளுக்கு ஆற்றுப் படுத்துதலும்.
- சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய கடுமையான நடவடிக்கைகள் சம்பந்தமாக மாகாண துஷ்பிரயோகங்களுக்கும் சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குதலும் உதவுதலும்
- சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக தேசிய தரவுப்பொதியொன்றை தயாரித்தலும் அதனைப் பேணிவருதலும்.
- சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் ஆலோசனையை அறிந்து சிறுவர்களுக்காக சிறுவர் பாதுகாப்பு சேவைகளை வழங்குகின்ற அனைத்து மத மற்றும் அறக்கொடை நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களை பாதுகாத்தல் சம்பந்தமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், மேம்படுத்துதல், மற்றும் ஒருங்கிணைத்தல்.

- சிறுவர்களின் பாதுகாப்பினையும் உரிமைகளையும் பாதுகாத்தல் சம்பந்தமாக மக்களுக்கு தகவல்களை வழங்குதலும் விழிப்புணர்வூட்டுதலும்.
- சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான வாய்ப்புகளை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அனைத்து துறைசார்ந்தவர்களுடனும் கலந்துரையாடுதல்.
- அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகங்களையும் வெளிக்கொணர்வதற்கும் தடுப்பதற்கும் வெளிநாட்டு அரசாங்கங்கங்களுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றுதலும் தகவல்களை பரிமாறிக்கொள்ளுதலும்.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உபபிரிவுகள்,........................**


தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் பின்வரும் உபபிரிவுகள் செயற்படுகின்றன. சிறுவர் பாதுகாப்புக்காக இப்பிரிவுகளினால் விசேடமான பல பணிகள் இடம்பெறுகின்றன.

- நிருவாகப் பிரிவு
- நிதிப் பிரிவு
- திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
  - நூலகம்
- நிகழ்ச்சித்திட்டப் பிரிவு
- உளசமூகப் பிரிவு
- சட்டப்பிரிவு
- சட்ட அமுலாக்கல் பிரிவு
  - 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை
  - புலனாய்வுப் பிரிவு
  - மத்திய ஆவணக்கூடம்
- கருத்திட்டப் பிரிவு
- விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## பிள்ளைகளுக்காக நாம் நாடளாவிய ரீதியில் ...................

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிகளை நாடளாவிய ரீதியில் நிறைவேற்றுவதற்காக மாவட்ட மட்டத்தில் அதிகாரசபையின் இரண்டு உத்தியோகத்தர்களும் பிரதேச செயலக மட்டத்தில் ஒரு உத்தியோகத்தரும் பணியாற்றுகின்றனர். பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு தேவையான அனைத்து பணிகளும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிமனையுடன் இணைந்து மேற்கொள்வதே இவர்களின் பிரதான பணியாகும்.

# 2013 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவனரீதியிலான கட்டமைப்பு




**சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் அனைத்து விடயங்களையும் செய்கின்றோம்**

சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய அனைத்து விதமான துஷ்பிரயோகங்களையும் தடுத்து சிறுவர்களுக் கெதிரான அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு பதிற்செயற்பாடு காட்டுவதே சிறுவர் பாதுகாப்பு என அழைக்கப்படுகின்றது. வளர்ந்தவர்களினால் சிறுவர்களை தவறான விடயங்களுக்கு ஈடுபடுத்திக் கொள்ளுதல் சிறுவர் துஷ்பிரயோகம் என எளிமையாக கோடல் செய்ய முடியும். இதன் காரணமாக பிள்ளைகளுக்கு சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதக நிலை கொஞ்சநஞ்சமல்ல. துஷ்பிரயோகம் காரணமாக சிறுவர்கள்,

- அதிர்ச்சியடைதல்
- திகிலடைதல்
- தன்னம்பிக்கையை இழந்து போகுதல்
- கல்வி நடவடிக்கை வீழ்ச்சியடைதல்
- நிம்மதியான நித்திரையின்மை
- எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஏற்படாமை
- தகாத செயல்களில் ஈடுபடுதல்
- குற்றச்செயல்களில் ஈடுபடுதல்
- வளர்ந்தவர்களை போல் நடத்தையை வெளிக்காட்டுதல்
- வயதை விட மிதமிஞ்சிய வகையில் பாலியல் சார்ந்த புரிதலை கொண்டிருத்தலை காணக்கூடியதாக இருத்தல்.

போன்ற பல்வேறுவிதமான அசௌகரிய நிலைகளுக்கு உள்ளாகியிருப்பதை காணக்கூடியதாக இருக்கும். சிறுவர்கள் இவ்வாறான நிலமைக்கு உள்ளாவதை தடுப்பதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும்.

**மலர்களைப் போன்ற சிறுவர் வாழ்க்கையை பாழாக்கும் 4 காரணிகள்**




**உடல் ரீதியிலான துஷ்பிரயோகம் என்பது**

எவரேனும் ஒருவரினால் பிள்ளையொன்றுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் ஏதேனும் உடல் ரீதியான சேதத்தை ஏற்படுத்துதல்

**பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் என்பது**

எவரேனும் ஒருவரினால் பிள்ளையொன்றை பாலியல் ரீதியிலான செயற்பாட்டுக்கு தொடர்புபடுத்திக் கொள்ளுதல்

**உள ரீதியிலான துஷ்பிரயோகம் என்பது**

சிறுவர்களின் உள ரீதியிலான அபிவிருத்திக்கு பங்கம் ஏற்படக்கூடிய ஏதேனுமொரு நடவடிக்கையை மேற்கொள்ளுதல்

**புறக்கணித்தல் என்பது**

பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் பிள்ளையின் அடிப்படை தேவைப்பாடு பற்றி கவனம் செலுத்தாமை ஆகும்.

**துஷ்பிரயோகிகளுக்கு சிறுவர்களை நெருங்குவதற்கு இடமளியோம்.......**

**அவர்களிடமிருந்து பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்வோம் .......**

- பிள்ளைகளுடன் நீங்கள் வெளிப்படையாகக் கலந்துரையாடுகள்
- பிள்ளைகள் உணரும் வகையில் அன்பு செலுத்துங்கள்
- பிள்ளைகளுக்கு நன்றாக செவிமடுங்கள்
- பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகள் பற்றி போதிய புரிந்துணர்வை பெற்றுக்கொள்ளுங்கள்
- தகுந்த மற்றும் தகாத தொடுகைகளைப் பற்றி பிள்ளைகளுக்கு அறிவூட்டுங்கள்
- தகாத தொடுகைகள் மூலமாக உடலுக்கு அசௌகரியமும் தொந்தரவும் ஏற்படுகின்றதென பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்துங்கள்
- தகாத வகையில் கட்டாயப்படுத்தும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்
- சமூகத்தில் வாழும் ஆட்கள் பல்வேறு வகையானவர்கள் என்பதையும் அவர்களிடம் இருந்து எச்சந்தர்ப்பத்திலும் அழுத்தம் ஏற்படலாம் என்றும் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுங்கள்.
- ஏதேனுமொரு சந்தரப்பத்தில் தான் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை உணர்ந்தால் உடனடியாக அவ்விடத்தை விட்டு அகன்று செல்வதற்கு பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்
- துஷ்பிரயோகிகள் நண்பர்களைப் போல வருகை தந்து பல்வேறு பரிசுகளையும் அன்பளிப்பு களையும் கொடுத்து பிள்ளைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்வார்கள் என அவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள்
- ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களில் இருப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு பிள்ளைகளுக்கு அறிவூட்டுங்கள்
- எவரேனும் ஒருவர் துன்புறுத்துவதற்கு முயற்சி செய்தால் உரக்க சந்தமிடுவதற்கு அல்லது அவ்விடத்தை விட்டு ஓடி விடுவதற்கு முயற்சி செய்யுமாறு உங்களுடைய பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்குங்கள்.
- சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அவர்கள் தனியாக இருக்கும் போதே ஏற்படுகின்றன என்பதை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்
- பிள்ளைகளின் நண்பர்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்
- இயன்றவரை எல்லா சந்தர்ப்பங்களிலும் உங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கும் மேலதிக வகுப்புகளுக்கும் கூட்டிப் செல்வதற்கும் மீள கூட்டி வருவதற்கும் நீங்களே முயற்சி செய்யுங்கள்.
- சாதாரண பாடசாலை நேரமும் மேலதிக வகுப்பு நேரமும் முடிவடையும் முன்னர் சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டாமென்று பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்
- மிகவும் நெருங்கியவர்களினாலும் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகலாம் என அவர்களுக்கு விரிவாக சொல்லிக் கொடுங்கள்
- சிறுவர்கள் இணையத்தளத்தை பயன்படுத்தும் பொழுது அது சம்பந்தமாக கவனம் செலுத்துங்கள்

**மகிழ்ச்சி ததும்பும் சிறுவர் உலகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான எமது பணிகள்**

மகிழ்ச்சி ததும்பும் சிறுவர் உலகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நாடளாவிய ரீதியில் பல நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. இந்திகழ்ச்சி களின் நோக்கம் நாட்டில் உள்ள சிறுவர்களை அனைத்து விதமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பானதொரு சூழமைவை கட்டியெழுப்புவதாகும். எமது தாய்நாட்டுக்கு நாம் ஆற்றக்கூடிய பாரிய பணி நாட்டின் எதிர்காலமாகிய எமது சிறார்களை பாதுகாத்து அவர்களுக்கு சிறந்த ஆளுமையும் கண்ணியமும் மிக்க பெருமையடையக்கூடிய சிறுவர் பராயமொன்றை பெற்றுத் தருவதாக அமைகின்ற அதேவேளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இந்நோக்கில் 2013ம் ஆண்டில் பல நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியிருக்கின்றது.

## அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

## 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை

“1929” என்பது சிறுவர்களின் உச்சமட்ட நலனுக்காக பணியாற்றும் இலங்கையிலுள்ள ஒரேயொரு சிறுவர் தொலைபேசி சேவையாகும். 1998ம் ஆண்டின் 50ம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தினால் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான பொதுமக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிக்கடமையென குறிப்பிடப் பட்டுள்ளது. அதன் பணிகளை மிகவும் வினைத்திறன் மிக்கவகையிலும் பயனுறுதி மிக்க வகையிலும் ஈடேற்றுவதற்காக வசதி வழங்கும் நோக்கில் 2010ம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் நிறுவப்பட்டுள்ள இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றுக்கு துரிதமான பதிற் செயற்பாடுகளை காட்டும் முதன்மையான பொறிமுறையாக செயற்படுகின்றது. 24 மணித்தியாலமும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செயற்படும் இத்தொலைபேசி சேவைக்கு எந்தவொரு செல்லிடத் தொலைபேசி அல்லது நிரந்தர தொலைபேசியிலிருந்தும் இலவசமாக தொடர்புகொள்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

சர்வதேச சிறுவர் தொலைபேசி சேவை சங்கத்தின் ஆயுட்கால உறுப்பாண்மையைப் பெற்று சிறுவர்கள் முகங்கொடுக்கும் துஷ்பிரயோக நிலமைகள் சம்பந்தமாக சிறுவர் நேயமிக்க அணுகுமுறைகள் ஊடாக துரிதமாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பதிலளிப்பதை நோக்காகக் கொண்டு பணியாற்றும் இச்சேவையுடன் எந்தவொரு பிள்ளையும் அல்லது வளர்ந்தவரும் தொடர்பு




கொண்டு தகவல்களை வழங்கும் ஆற்றல் இருக்கின்றது. தற்போது நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் சிறுவர்கள் வளர்ந்தவர்கள் மற்றும் ஏனைய சமுதாயங்களிலிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் இருப்பதுடன் சில ஒளிவுமறைவாக இருந்த துஷ்பிரயோகங்களைக் கூட வெளிக் கொணர்வதற்கு இதனூடாக வாய்ப்புக் கிட்டியுள்ளது.

மேலும், 1929 தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அதன் வழியாக

கிடைக்கும் முறைப்பாடுகள் சம்பந்தமாக துரிதமாக விசாரணைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு விசேட மானதொரு பொறிமுறை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேண்டுகோளுக்கிணங்க பொலிஸ் திணைக்களத்தினாலே செயற்படுத்தப்படுகின்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேண்டுகோளுக்கிணங்க அப்போதைய அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவரும் தற்போதைய பொலிஸ்மா அதிபருமாகியவரின் தலையீட்டுடன் 1929 சிறுவர் தொலைபேசி சேவைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் சம்பந்தமாக பணியாற்றுவதற்கு ஏற்புடைய ஆலோசனைகளை வழங்கி நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் திணைக்களத்தினூடாக உள்ளக சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளது. 1929 தொலைபேசி சேவையினூடாக கிடைக்கும் முறைப் பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் ஆற்றுப்படுத்தப்பட்டதையடுத்து அவ்வாறான முறைப்பாடுகள் சம்பந்தமாக உடனடியாக விசார ணைகளை மேற்கொண்டு 48 மணித்தியாலங்களுக்குள் அது சம்பந்தமான முன்னேற்ற அறிக்கை யொன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்க வேண்டுமென அதனூடாக ஆலோசனை வழங்கப்பட்டது. 1929 தேசிய சிறுவர் தொலைபேசி சேவை நிறுவப்பட்டதையடுத்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த பெருந்தொகையான முறைப்பாடுகள் சம்பந்தமாக துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவ் ஒருங்கிணைப்பு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏதுவான இவ்வாறான முறைசார்ந்ததும் பலம் வாய்ந்ததுமான பொறிமுறை ஒன்று செயற்படுவதுடன் பாதிக்கப்பட்ட பிள்ளை களுக்கு தேவையான உளவள ஆலோசனையை வழங்குதல் பாடசாலைகளுக்கு ஆற்றுப்படுத்துதல், பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மீண்டும் சமூகத்தில் ஒருங்கிணைத்தல், ஆபத்து நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான ஒத்தாசைகளை வழங்குதல், சட்ட ஆலோசனைகளை வழங்குதல் போன்ற ஏனைய ஒத்துழைப்புகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தேவையான உளவள ஆலோசனைகள் உள்ளிட்ட உள சமூக உதவிகளை வழங்குதல் சம்பந்தமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசேட கவனத்தை செலுத்தி வருகின்றது. நாடளாவிய ரீதியில் பணியாற்றுகின்ற மாவட்ட உள சமூக உத்தியோகத்தர்கள் வழியாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்குத் தேவையான உள சமூக உதவிகளை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. மேலும், பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்காக பழைய நிலைக்கு திரும்புவதற்கு தேவையான ஒருங்கிணைப்பினை வழங்கும் பொருட்டு நாடளாவிய ரீதியில் பரந்து பணியாற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைகளை ஈடேற்றுகின் றனர். இந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக சட்டம் அமுலாக்கப்படுவதை ஒழுங்குபடுத்தி தேசிய சிறுவர் அதிகாரசபை பின்னாய்வு களையும் மேற்கொள்கின்றது. 2013ம் ஆண்டில் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 30657 ஆகும்.




**2013ம் ஆண்டில் இலங்கை 1929 சிறுவர் தொலைபேசிச் சேவைக்கு கிடைத்துள்ள தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை**

## பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்கள்

பாடசாலையானது சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக மாற்றமொன்றை ஏற்படுத்தக்கூடிய இடம் என இனங்கண்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கல்வி அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் "சுரெக்கும் பவ்வ" எனும் பெயரில் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது, இது பாடசாலைக்குள்ளும் அதற்கு புறம்பாகவும் ஏற்படும் சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்பதற்காகவும் சிறுவர் நேயமிக்க கல்விச் சூழலொன்றை பாடசாலைக்குள் ஏற்படுத்துவதற்காகவும் அனைத்து சந்தரப்பங்களிலும் சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்து சிறந்த ஆளுமையுடைய சிறுவர் சந்ததியொன்றை உருவாக்குவதற்கும் பிரதான நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்சசித்திட்டமாகும். இதற்கு 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதுடன் இது மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் தொடர்புகள் ஊடாக சிறுவர் பாதுகாப்பினை உறுதி செய்தல் சம்பந்தப்பட்ட உத்திரீதியானதொரு அணுகுமுறையாகும். இவ்விடயத்தில் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படுகுின்றது.

1. அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்தும் பிள்ளைகளை பாதுகாத்துக்கொள்ளுதல்
2. பல்வேறுவிதமான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியுள்ள சிறுவர்கள் பாடசாலைகளில் இருப்பார்க ளாயின் அவ்வாறானவர்களை மிகவும் இரகசியமானதொரு முறையில் இனங்காண்பதற்கும் அவ்வாறானவர்களுக்கு தேவையான பாதுகாப்பையும் காப்பையும் உறுதிசெய்வதற்கும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை விழிப்புணர்வூட்டுதல்
3. கல்வி நடவடிக்கைகளில் பின்தங்கிய மாணவர்களை வகுப்பு மட்டத்தில் இனங்காண்பதற்கும் அதற்கு ஏதுவான சமூக, பொருளாதார காரணங்களையும் குடும்ப பின்னணியையும் இனங்காணும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் அத்துடன் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பின்னாய்வு உள்ளிட்ட வளக் குறைபாடுகளை பூர்த்திசெய்வதற்கு தேவையான ஆற்றுப்படுத்தல்கள்.
4. உடல் மற்றும் உள ரீதியான விசேட தேவைகளுடைய சிறுவர்களுக்கு உதவுதல்.
5. பிள்ளைகளின் மனவழுத்தத்தை குறைப்பதற்கு தாக்கம் விளைவிக்கும் ஆக்கபூர்வமானதும் சிகிச்சை சார்ந்ததுமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
6. பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான உணர்வுகளையும் சோகம் நிறைந்த அனுபவங்களையும் வெளிப்படுத்துவதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குதல்
7. பிள்ளைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்துதல்
8. பிள்ளைகளுக்கு செவிமடுத்தல்
9. பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவை மற்றும் ஒருங்கிணைப்பை இடையறாமல் வழங்குதல்
10. பாடசாலை மாணவர்கள் புகைபிடித்தல், மதுபாவனை, போதைப் வஸ்த்துக்கள், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற துர்நடத்தைக்கு உள்ளாவதை தடுத்துநிறுத்துதல்.
11. ஒழுக்கநெறிசாரந்த நடத்தைகளைப் பற்றி பாடசாலை மாணவர்களுக்குள்ள பொறுப்பினை புரிந்துகொள்ளச் செய்தலும் சிறந்த முறையில் அவர்களின் ஆளுமையை கட்டியெழுப்புதலும்.
12. ஒழுக்கநெறிசார்ந்த சிறுவர் நேயமிக்க பாடசாலை சூழலொன்றை கட்டியெழுப்புதல்
13. முழுமையான ஆளுமையுடைய பிரஜைகள் குழுமமொன்றை கட்டியெழுப்புதல்

2013ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்புக்குழு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் 1,464 உளவள ஆலோசனை ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் திருகோணமலை, மொனராகலை, அம்பாறை, மாத்தளை, கண்டி மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் 1,108 அலுவலகர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (உளவள ஆலோசனை ஆசிரியர்கள் தவிர்ந்த) 2689 பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விழிப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.





பாடசாலை சிறுவர் பாதுகாப்புக்குழு தாபித்தலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விசேட விடயமாக சிறுவர்களின் உள நிலையை இனங்காணுதலும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் அவர்களின் பிரச்சினைகள் மற்றும் கருத்துக்களை பதிவுசெய்து இடுவதற்குமான (“சினா கந்துலு பெட்டிய’) (புன்னகை கண்ணீர் பெட்டி) எனும் தகவல்களை பெற்றுக்கொள்ளும் பெட்டியொன்று பாடசாலையில் நிறுவப்படுகின்றது.



**பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களின் கீழ் உளவள ஆலோசனை வழங்கும் ஆசிரியர்களுக்கு அறிவூட்டுதல் (மாவட்டங்களுக்கேற்ப)**

| மாவட்டம் | ஆலோசனை ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 69 |
| காலி | 68 |
| மாத்தறை | 80 |
| அம்பாந்தோட்டை | 44 |
| மொனராகலை | 86 |
| பதுளை | 117 |
| கண்டி | 75 |
| நுவரெலியா | 62 |
| மாத்தளை | 102 |
| அநுராதபுரம் | 74 |
| பொலநறுவை | 73 |
| இரத்தினபுரி | 88 |
| கேகாலை | 101 |
| குருநால் | 162 |
| புத்தளம் | 91 |
| அம்பாறை | 60 |
| மட்டக்களப்பு | 66 |
| திருகோணமலை | 46 |
| ***மொத்தம்*** | ***1464*** |

**சிவில் ஒழுங்கமைப்புகளை சார்ந்த உறுப்பினர்களையும் பெருந்தோட்டத்துறை சார்ந்த சமுதாயத் தையும் விழிப்புணர்வூட்டுதல்**

துஷ்பிரயோகங்கள் அற்ற பாதுகாப்பான சிறுவர் சந்ததியொன்றை கட்டியெழுப்புவதற்காக சமுதாயத் துக்குரிய கடப்பாட்டினை விளங்கவைத்து அவர்களின் அறிவுத்திறன் மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கான நாடளாவிய ரீதியில் கிராமிய மட்டத்தில் சிவில் ஒழுங்கமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களையும் பெருந்தோட்டங்களைச் சார்ந்த சமுதாயத்தையும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் விடயத்தில் அனைத்து மாவட்டத்திற்குள்ளும் கிராமிய மட்டத்தில் செயற்படும் சமுர்த்தி சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், மரண சகாய சங்கங்கள், நலனோம்புகை சங்கங்கள், கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் போன்ற சிவில் அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களையும் பெருந்தோட்டத்துறை சார்ந்த சமுதாயத்தையும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமிய மட்டத்திலும் பெருந்தோட்டங்களிலும் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைத்து சிறுவர்களுக்கு மிகவும் பாதுகாப்பானதொரு சூழலைக் கட்டியெழுப்புவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

**2013 ஆம் ஆண்டில் சிவில் சமுக அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் பெருந்தோட்டத்துறை சார்ந்த சமுதாயத்திற்கும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்தித்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப் பட்டதுடன் அந்நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 14,988 ஆகும்.**

| **மாவட்டங்கள்** | **சிவில் சமுக அமைப்பு உறுப்பினர் களையும் பெருந்தோட்டத்துறை சார்ந்த சமுதாயத்தையும் விழிப்புணர்வூட்டுதல்** |
|---|---|
| கொழும்பு | 534 |
| கம்பஹா | 698 |
| களுத்துறை | 503 |
| காலி | 418 |
| மாத்தறை | 791 |
| அம்பாந்தோட்டை | 1205 |
| மொனராகலை | 1170 |
| பதுளை | 1363 |
| கண்டி | 1227 |
| நுவரஎலிய | 905 |
| மாத்தளை | 198 |
| அனுராதபுரம் | 669 |
| பொலன்னறுவை | 234 |
| இரத்தினபுரி | 1546 |
| கேகாலை | 974 |
| புத்தளம் | 413 |
| அம்பாறை | 189 |
| வவுனியா | 594 |
| கிளிநொச்சி | 901 |
| யாழ்ப்பாணம் | 231 |
| திருகோணமலை | 225 |
| **மொத்தம்** | ***14,988*** |

**பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்**

துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை பாதுகாத்துக்கொள்ளும் பணியில் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் பணி சிறப்புத்தன்மை வாய்ந்ததாகும். சிறுவர் துஷ்பிரயோகம் ஒன்றின்போது அதனுடன் தொடர்புடைய சட்டங்களை உரியமுறையில் நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு தேவையான சட்டரீதியான ஒத்துழைப்பினைப் பெற்றுத் தருதல் அத்தியாவசியமான விடயமாகும். இப்பணியில் பொலிஸ் திணைக்களத்திற்கு மிகவும் முக்கியமானதொரு பொறுப்பு சாட்டப்படுகின்றது.

இதற்கேற்ப, பாதிக்கப்பட்ட பிள்ளையின் ஆரம்பகட்ட கூற்றினை பதிவுசெய்து பதிவுசெய்யும் விடயத்தில் ஆரம்பிக்கும் ஒட்டுமொத்த நீதியை நிலைநாட்டும் செயல்முறையில் சிறுவர் நேயம் மிக்கதும் பாதிக்கப்பட்ட பிள்ளையின் அடையாளம் பாதுகாக்கப்படுகின்றதுமான முறைமையொன்றை பயன்படுத்துதல் அத்தியாவசியமானதாகும். இவ்விடயத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும் பல நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. துஷ்பிரயோகத் திற்கு இரையாகும் பிள்ளைகள் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகக்கூடிய ஆபத்து நிலையிலுள்ள பிள்ளைகள் ஆகியோருடன் பணியாற்றவேண்டிய முறைமை சம்பந்தமாக புதிய சட்ட திருத்தங்களைப் பற்றி விழிப்பூட்டும் விடயமும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக அமைகின்றது. 2013ம் ஆண்டில் பொலிஸ் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.



**சுகாதாரத்துறை தொழில்வாண்மையாளர்களையும் அதனுடன் இணைந்த சேவைகளில் ஈடுபட்டுள்ளவர் களினதும் திறன்களை விருத்தி செய்தல்**

சுகாதாரத்துறை சார்ந்த தொழில்வாண்மையாளர்களையும் அதனுடன் தொடர்புடைய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களினதும் திறன்களை விருத்தி செய்ய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சுகாதார சேவையுடன் தொடர்புடையதாக சிறுவர் நேயமிக்க சுகாதார சேவையொன்றை கட்டியெழுப்பும் விடயத்தில் சிறுவர்களுக்கு ஏற்புடைய விடயங்களில் சுகாதாரதுறை சார்ந்த தொழில்வாண்மை யாளர்களை கூருணர்வுடையவர்களாக ஆக்குவது சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக மிகவும் சாதகமான முறையில் அக்கறை காண்பிப்பதற்கு தேவையான அறிவினைப் பெற்றுத் தருதல் இந்நிகழ்ச்சித்தித்

திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், சுகாதார தொழில்வாண்மையாளர்ளுக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் இடையில் நிலவும் தொடர்புகளை மேலும் வலுவூட்டுவதன் ஊடாக சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக ஒன்றிணைந்த செயற்றிட்டமொன்றை ஆக்குவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குவது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கேற்ப மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பினை தொடருகின்ற மருத்துவர்கள் மற்றும் தாதிகள் குடும்ப சுகாதாரசேவை உத்தியோகத்தர்கள், பொதுசன சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சுகாதார துறைசார்ந்த தொழில்வாண்மையாளர்களுக்கும் அதனுடன் தொடர்புடைய சேவைகளில் ஈடுபட்டுள்ள 509 பேரையும் விழிப்புணர்வூட்டுவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.



**தேசிய கல்வியல் கல்லூரிகளிலுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.**

சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக பல்வேறு துறைகளில் அறிவையும் திறனையும் வழங்குவதின் மூலம் சிறுவர்கள் பற்றிய மிகவும் கூருணர்வுடைய ஆசிரியர் சமுதாயமொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கு வருகைதருவதற்கு எதிர்பார்த்திருக்கும் தேசிய கல்வியல் கல்லூரிகளில் கல்வி கற்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு பின்வரும் துறைகளை உள்ளடக்கும் வகையில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்ட பின்னணியை இனங்காணுதல்.
- சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக ஆசிரியர்களுக்குரிய கடமைகளையும் பணிகளையும் துஷ்பிரயோகம் சம்பந்தமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் இனங்காணுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை இனங் காணுதல்.
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் அதன் கடமைப்பணிகளை இனங்காணுதல்
- சிறுவர் மனோநிலையை இனங்காணுதலும் உடல் ரீதியான தண்டனை வழங்காமல் மாணவர்களை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய முறைகளை இனங்காணுதல்
- சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ள மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகக்கூடிய சிறுவர்களை இனங்காணுதல்.

**2013 ஆம் ஆண்டு கல்வியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை விழிப்புணர்வூட்டும் 06 நிகழச்சித்திடங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் விளைவாக பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 912 ஆகும்.**





## கர்ப்பிணித் தாய்மாரை விழிப்புணர்வூட்டுதல்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மையான நோக்கம் பிரசவத்திற்கு முன்னான காலம் தொட்டே சிறுவர்களை பாதுகாத்தல் குடுப்பத்திற்குள் சிறுவர் நேயம் மிக்க சூழல் ஒன்றை கட்டியெழுப்புதல், சிறுவர்களை துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய துஷ்பிரயோகங்களை தடுத்தல், சிறுவர் விருத்தி, சங்கீத ரசனை, மற்றும் கர்ப்பிணி தாய்மாரின் மனஅழுத்தத்தை முகாமைத்துவம் செய்தல் போன்ற விடயங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதாகும். சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களின் கீழ் நாடளாவிய ரீதியில் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இதற்கேற்ப 2013ம் ஆண்டு கர்ப்பிணித் தாய்மாரை விழிப்புணர்வூட்டும் 128 நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| மாவட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 5 |
| களுத்துறை | 5 |
| கம்பஹா | 5 |
| கண்டி | 5 |
| மாத்தளை | 6 |
| நுவரெலியா | 6 |
| காலி | 5 |
| மாத்தறை | 5 |
| அம்பாந்தோட்டை | 5 |
| யாழ்ப்பாணம் | 5 |
| மன்னார் | 5 |

| | |
|---|---|
| வவுனியா | 6 |
| கிளிநொச்சி | 5 |
| மட்டக்களப்பு | 5 |
| அம்பாறை | 5 |
| திருகோணமலை | 5 |
| குருநாகல் | 5 |
| புத்தளம் | 6 |
| அநுராதபுரம் | 5 |
| பதுளை | 5 |
| மொனராகலை | 5 |
| இரத்தினபுரி | 4 |
| கேகாலை | 5 |
| பொலன்னறுவை | 5 |
| முல்லைத்தீவு | 5 |
| **மொத்தம்** | **128** |

### பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் சார்ந்த அறிவூட்டல்

எந்தவித துஷ்பிரயோகங்களுமற்ற பாதுகாப்பான சிறுவர் சந்ததியொன்றை கட்டியெழுப்புவதற்காக பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்குரிய பொறுப்புகளைப் பற்றி விழிப்புணர்வூட்டி அவர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக 2013 வருடத்திற்குள் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் சார்ந்த ஆசிரியர்களையும் பெற்றோரையும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### பெற்றோருக்கு விழிப்புணர்வூட்டல்

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அண்மைக்கால அனுபவங்களை பகுப்பாய்வு செய்யும் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை புரிந்து கொண்ட முக்கியமான விடயம் யாதெனில் பெற்றோரின் அறியாமை மற்றும் அவர்கள் சிறுவர்களின் மனதை சரியான முறையில் புரிந்து கொள்ளாமை ஆகிய காரணங்கள் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கு தாக்கம் விளைவிக்கும் முக்கியமான காரணிகளாக அமைகின்றன என்பதாகும். இந்நிலைமையின் கீழ் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் சம்பந்தமாக பெற்றோருக்குரிய பணி யாதெனவும் இவ்விடயத்தில் அவர்களுக்கு இருக்கவேண்டிய திறன்கள் யாவை என்பதைப் பற்றியும் பெற்றோரை விழிப்பூட்டும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

பிள்ளைகளின் பாதுகாப்பு, அபிவிருத்தி நன்னடத்தை சம்பந்தமாக செயலாற்றும் போது குடும்பத்திற் குரிய கடமைப்பணி மிகவும் முக்கியமானதாகும். இவ்விடயத்தில் தாய் மற்றும் தந்தையரின் பணியானது மிகவும் விசேடமானதாகும். பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கல்வி, உணவு, உடை போன்ற அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுத்தல் மாத்திரமன்றி அவர்களை துஷ்பிரயோகங்களி லிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன? சிறுவர் துஷ்பிரயோகம் ஒன்று இடம்பெற்றுள்ளதென அறியக்கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எவ்விடத்திற்கு அறிவிக்க வேண்டும் போன்ற விடயங்கள்

சம்பந்தமாக அனைத்து பெற்றோரும் விழிப்புணர்வடைந்திருத்தல் கட்டாயமானதாகும். பெற்றோர் தமது பிள்ளைகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்துவதினூடாக சிறந்த ஆளுமையுடைய சிறுவர் சந்ததியொன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இவ்விடயம் சம்பந்தமாக புரிந்துணர்வொன்றை வழங்குவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பெற்றோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. 2013ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக பெற்றோருக்கு விழிப்புணர்வூட்டும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





### பிள்ளைகளுக்கு விழிப்பூட்டல்

அனைத்துவிதமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சிறுவர்கள் கட்டாயமாக விழிப்பூட்டல் செய்யப்படல் வேண்டும்.ந்த இலக்கினை அடைந்துகொள்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. சிறுவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல் பெரியவர்களின் முக்கியமானதொரு கடப்பாடாக இருக்கும் அதேவேளை பிள்ளைகளும் தாங்களாகவே தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதும் முக்கியமானதாகும். சிறுவர்கள் எந்தவிடத்திலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகக் கூடும். இவ் துஷ்பிரயோக நிலைகளிலிருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்துக்கொள்வது அல்லது தான் அல்லது தனது நண்பர் ஏதேனும் துஷ்பிரயோக நிலைக்கு முகம்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக அனைத்து சிறுவர்களும் விழிப்புணர்வு அடைந்திருத்தல் வேண்டும். 2013ம் ஆண்டு நாடு தழுவிய வகையில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.






**இளைஞர் குழுக்களை அறிவூட்டுதல்.**

கிராமத்திலேயே சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றைப் பெற்றுத்தருதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழித்துக்கட்டுவதற்காக சமூகத்தின் பல்வேறு குழுக்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் பயனுறுதி உடையதாக அமைவதால் அதற்கு இளைஞர்கள் ஒன்றிணைந்து செயற்படும் சிறு குழுக்களை இலக்காகக்கொண்டு சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக விழிப்பூட்டி அவர்களினால் மேற் கொள்ளப்படவேண்டிய சமூககடப்பாடாக கருதி சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு பங்களிப்பினை பெற்றுக்கொள்ளுதல் இவ்விடயத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. 2013ம் ஆண்டில் நாடு தழுவிய வகையில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக இளைஞர் குழுக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் அனைத்து நிறுவனங்களும் தரப்படுத்தப்பட்ட வகையில் தர நியமங்களுக்கேற்ப சிறுவர் நேயம் மிக்க வகையில் பேணி வரப்படுவதும் அதனூடாக சிறுவர்களின் உச்சமட்ட நன்மை உறுதிப்படுத்தப்படுவதும் அத்தியாவசியமான விடயங்களாகும். ஆயினும் கடந்த காலத்திலே சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்கள் பாதுகாப்பு வழங்கல் சம்பந்தமாக பாரதூரமான சிக்கல் மிகு நிலைகள் நிலவுவதை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ளது. குறிப்பாக, சிறுவர்களை இவ்வாறான நிறுவனங்களில் சேர்க்கும் விடயம் வேறு எந்தவித மாற்றுவழிகளுமே இல்லாத சந்தர்ப்பத்தில் இறுதியாக மேற்கொள்ளப்படவேண்டிய விடயமாக இருப்பினும் இலங்கையில் தாய் தந்தை ஆகிய இருவரும் உயிருடன் இருக்கும் சந்தர்ப்பத்திலேயே பெருந்தொகையான சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது சிக்கல் மிகுந்ததொரு நிலையாகும். அனைத்துலக சிறுவர் பட்டகத்தின் 25ம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிள்ளையொன்று சிறுவர் இல்லமொன்றுக்கு சேர்க்கப்பட்ட பின்னர் அப்பிள்ளையின் பாதுகாப்பு காப்பு மற்றும் சம்பந்தப்பட்ட இடம் சம்பந்தமாகவும் பிள்ளையைப் பற்றியும் தொடர்ச்சியான மேற்பார்வை செய்யப்பட வேண்டும். மேலும் நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ள பிள்ளைகளின் உச்சமட்ட நன்மையைக் கருதி 1998ம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(ங) உறுப்புரைக்கேற்ப மத நிறுவனங்கள் மற்றும் அறக்கொடை நிறுவனங்களினால் பேணி வரப்படுகின்ற சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நிறுவனங்கள் பற்றி மேற்பார்வை செய்தல் மற்றும் அது சம்பந்தமாக ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளுதல் ஆகிய விடயங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினாலே மேற்கொள்ளப்படுகின்றது. 2013ம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ஆற்றல் கிட்டியது.

இவ்விடயங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பிராந்திய உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்புடன் செயற்படுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் மத நிறுவனங்கள் மற்றும் அறக்கொடை நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற அனைத்து சிறுவர் இல்லங்கள் சம்பந்தமாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பல்துறை சார்ந்த குழுவொன்றின் ஊடாக சிறுவர்களும் உடல் மற்றும் உள சுகாதாரம் துப்பரவேற்பாடு, கல்வி மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக பரந்தளவிலானதொரு வீச்சில் இயங்கும் விரிவான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் வழியாக சிறுவர் களுக்காக உள சமூக செயற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதுடன் சிறுவர்களுக்கு தங்களின் கருத்

துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நியமங்களுக் கேற்ப இல்லங்களில் உள்ள பாதுகாப்பின் கீழ் சிறுவர்களின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற் கான வழிகாட்டல்களை வழங்குதல் இதன் நோக்கமாக அமைகின்றது. மேலும் சிறுவர் இல்லங்களை முறை சார்ந்த வகையில் பேணி வருதல் சம்பந்தமாக விசேட கலந்துரையாடலொன்று 2013ம் ஆண்டு சனவரி மாதம் 4ம் திகதி மாகாண நன்னடத்தை ஆணையாளர்களின் பங்கேற்புடன் இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக ஒன்றிணைந்த அணுகுமுறை யொன்றை அமுல்படுத்துவதே இக் கலந்துரையாடலின் நோக்கமாக அமைந்தது.

2013ம் ஆண்டில் பின்வரும் மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் 329 சிறுவர் இல்லங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2013ம் ஆண்டுக்கான சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்யும் நிகழ்ச்சித்திட்டம் (மாவட்ட அடிப்படையில்)**

| மாவட்டம் | மேற்பார்வை செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 15 |
| களுத்துறை | 12 |
| கம்பஹா | 49 |
| கண்டி | 21 |
| மாத்தளை | 07 |
| நுவரெலியா | 09 |
| காலி | 21 |
| மாத்தறை | 15 |
| அம்பாந்தோட்டை | 04 |
| யாழ்ப்பாணம் | 23 |
| மன்னார் | 05 |
| வவுனியா | 12 |
| கிளிநொச்சி | 07 |
| மட்டக்களப்பு | 37 |
| அம்பாறை | 13 |
| குருநாகல் | 20 |
| புத்தளம் | 11 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 10 |
| மொனராகலை | 08 |
| இரத்தினபுரி | 08 |
| கேகாலை | 08 |
| பொலன்னறுவை | 03 |
| முல்லைத்தீவு | 04 |
| **மொத்தம்** | **329** |

**சுனாமி பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு புனர்வாழ்வளித்தலும் நலனோம்புகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.**

2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பெற்றோரை இழந்த 18 வயதிற்கு குறைவான அனைத்து பிள்ளைகளுக்கும் 21 வயதிற்கு குறைவானவர்களுக்கும் பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்து உயிரோடிருக்கும் தாய் அல்லது தந்தையினால் பாதுகாப்பளிப்பதற்கு இயலாத அனைத்து பிள்ளைகளுக்கும் இளம் ஆட்களுக்கும் 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் பாதுகாப்பளிக்கப்படும்.

நீதிமன்றத்தின் முழுமையான காப்புநிலைக்கு உள்ளாகியுள்ள பெற்றோர் இருவரையும் இழந்த நிலையிலுள்ள அனைத்து சிறுவர்களினதும் கெப்பகரு மாபிய பாதுகாப்பளிக்கும் முறையின் கீழ் உள்ள அனைத்து சிறுவரகளினதும் காப்புநிலை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பேணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட 227 சிறுவர்கள் சம்பந்தமான நலன்புரி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும், இப்பிள்ளைகளுக்கான நலனோம்புகை நடவடிக்கையாக நிதி உதவி வழங்கும் நிகழச்சித்திட்டமொன்றும் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது, 2013 ஆம் ஆண்டில் சுனாமி பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட 227 பிள்ளைகளுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையினால் நலனோம்புகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களில் நிதியுதவி வழங்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 160 ஆகும். மேலும், 2013.08.05 ஆம் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள சுனாமியினால் பாதிக்கப்பட்ட 59 பிள்ளைகளுக்கு விசேட நலனோம்புகை முகாமொன்றும் நடாத்தப்பட்டது,





**சுரக்னா கெபகரு பாதுகாப்பு முறைமை**

3 தசாப்தங்களாக நிலவிய பிரிவினைவாத மோதல்களின் காரணமாக அன்புக்குரிய பெற்றோரை இழந்து சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்பட வேண்டிய இடர்நிலைக்கு உள்ளாகியிருந்த பிள்ளைகளை இந்நிலைமையில் இருந்து மீட்டு அவர்களுக்கு குடும்ப சூழலொன்றில் உரிய பாதுகாப்பினை வழங்கக்கூடிய கெபகரு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமாக சுரக்னா நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப் படுகின்றது. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்தின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் சேர்க்காமல் அவர்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்களின் பாதுகாப்பின் கீழ் குடும்ப சூழலொன்றில் சிறுவர்களின் உச்சமட்ட நலனை உறுதிப்படுத்துதல் இதன் நோக்கமாகும். பல்வேறு இடர்களுக்கு மத்தியில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு

வழங்குகின்ற அப்பாதுகாவலர்களுக்கு சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் கல்வித்தேவைகளை ஈடேற்றும் வகையில் கைகொடுக்கும் வகையில் மாதாந்தம் உதவித்தொகையொன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்நிதியத்தின் அன்பளிப்புகளுக்காக உள்நாட்டி லிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் நன்கொடையாளர்கள் பங்களிப்பினை வழங்கி வருகின்றார்கள்.

2013ம் ஆண்டாகும் போது சுரக்னா கெபகரு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 53 சிறுவர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 52 சிறுவர் களுக்கும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 84 சிறுவர்களுக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பு கிடைத்தது.

## சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக ஊடகங்களை கூருணர்வூட்டுவதற்கான செயலமர்வு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நாளாந்த பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங் களில் வெளிவருகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் சார்ந்த ஏனைய செய்திகள், ஆக்கங்கள் போன்றவை ஒழுங்குபடுத்தப்படுகின்றது. இவ்விடயத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அறிக்கையிடப்படும் போது சில சந்தர்ப்பங்களில் ஊடக பாவனையானது பயன்தரும் வகையில் அமைவதில்லை என காணக் கிடைத்துள்ளது. ஆகவே, சிறுவர் துஷ்பிரயோகங்களை அறிக்கை யிடுதல் சம்பந்தமாக ஊடகவியலாளர்களை விழிப்புணர்வூட்டும் 02 செயலமர்வுகள் இந்த வருடத் திற்குள் நடாத்தப்பட்டதுடன் ஊடகவியலாளர்களுக்கான வழிகாட்டல் கைநூல் ஒன்றும் இவ் வருடத்தில் வெளியிடப்பட்டது.




## சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தேசிய தினம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1181/21 இலக்கமுடைய 2008ம் ஆண்டின் டிசம்பர் மாதம் 26ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அப்போதைய சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் கௌரவ திருமதி சுமேத ஜி ஜயசேன அவர்களினால் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 4ம் திகதி சிறுவர் வன்முறைக்கு எதிரான தேசிய தினமான பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டில் சிறுவர் வன்முறைக்கெதிரான தேசிய தினம் ''தயாவென் சினாஹவக்'' ' ' எனும் தொனிப்பொருளின் கீழ் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியத்தே அவர்களின் தலைமையில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இந் நிகழ்வில் பாடசாலை மாணவ மாணவிகள், பெற்றோர், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட 1000 பேருக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். சிறுவர்களுக்கெதிரான வன்முறையை ஒழித்துக்கட்டுதல் சம்பந்தமாக குழுமியிருந்தவர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் கலாசார நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது.

### சிறுவர் ஊழியத்திற்கு எதிரான உலக தினம்

சிறுவர் ஊழியத்திற்கு எதிரான உலக தினம் ஜூன் மாதம் 12ம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இம்முறையும் இத்தினம் 'சிறுவர் ஊழியத்திற்கு முற்றுப்புள்ளி' எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நுவரெலியா நகரத்தில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 24 பாடசாலைகளைச் சேர்ந்த 1500 மாணவர்கள் கலந்து கொண்டனர். சிறுவர் ஊழியம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் செயலரங்கொன்றும் பாடசாலை மாணவர் களினதும், ஆசிரியர்களினதும் பங்கேற்புடன் கலை நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு கலந்துகொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் 1929 சிறுவர் தொலைபேசி இலக்கமும் சிறுவர் ஊழியத்தை ஒழித்துக்கட்டுதல் சம்பந்தமாக செய்தி பொறிக்கப்பட்டதொரு டிசேர்ட்டும் தொப்பியும் வழங்கப்பட்டதுடன் விழிப்புணர்வூட்டும் கையேடுகளும் விநியோகிக்கப்பட்டன.




### தகவல்களை வழங்குதல்

சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப் படுகின்றது. இவ்விடயத்தில் தேவைக்கேற்ற வகையில் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், புத்தகங்கள், ஸ்டிக்கர்கள், அச்சிடப்பட்ட வெளியீடுகள் கட்புலன் சார்ந்த அறிக்கை நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றது. 2013ம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக 124957 வெளியீடுகள் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன.



## சிறுவர் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட தகவல்களை ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு எடுத்துச்செல்லுதல்

நாட்டில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான தகவல்களை ஊடக நிறுவனங் களுடன் ஒன்றிணைந்து மக்களுக்கு எடுத்துச்செல்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. இவ்விடயத்தில் அச்சு இலத்திரனியல் ஊடகங்களின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. சிறுவர் பாதுகாப் புடன் தொடர்புடைய அறிக்கைகளை ஊடகங்களுக்கு விடுத்தல், விடயத்துடன் தொடர்புடையதாக செய்தியாளர் மாநாடுகளை நடாத்துதல், தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவித்தல்களை விளம்பரப்படுத்துதல் பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரித்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. 2013ம் ஆண்டில் 02 தொலைக்காட்சி அறிவித்தல்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டன. மேலும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான வளங்களை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



## கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல்

பல்வேறு நிறுவனங்களினால் கல்வி கண்காட்சிகள் ஒழுங்குசெய்யப்படுவதுடன் கிடைக்கப்பெறும் வேண்டுகோள்களுக்கேற்ப அக்கண்காட்சிகளில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக விழிப்புணர்வூட்டும் கல்விசார் கண்காட்சிக் கூடங்களை ஒழுங்குசெய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேலும், பிராந்திய மட்டத்தில் நடாத்தப்படும் நடமாடும் சேவைகளுக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனது பங்களிப்பை வழங்குகின்றது. 2013ம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தயட்ட கிருல தேசிய அபிவிருத்தி கண்காட்சி உள்ளிட்ட பல கல்விசார் கண்காட்சிகளுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனது பங்களிப்பை வழங்கி சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



## லபெந்தி செய்தி மடல்

வெறுமனே செய்தி மடல் என்பதைப் பார்க்கிலும் அர்த்தம் பொதிந்ததாக இருக்கவேண்டுமெனும் தொனிப்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட ளபெந்தி எனும் பெயர் கொண்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ செய்திமடல் 3 மாதங்களுக்கு ஒரு முறை அதிகார சபையினால் பிரசுரிக்கப் படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது சம்பிரதாய பூர்வமான செய்தி மடல்களை பார்க்கிலும் சற்று வித்தியாசமான வடிவத்தில் வெளிவருகின்றது. சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள் உள்ளிட்ட அனைத்து சமுதாயத்தினரையும் விழிப்புணர்வூட்டுவதே இதன் அடிப்படை நோக்கமாக அமைகின்றது. அந்தந்த காலகட்டத்திற்கு பொருத்தமான தொனிப்பொருளை தெரிவுசெய்து ளபெந்தி செய்திமடல் வடிவமைக்கப்படுகின்றது. 2013ம் ஆண்டில் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை சிறுவர் ஊழியத்தை இல்லாதொழிப்போம். சிறுவர்களை பாதுகாக்கும் விடயத்தில் பெற்றோரின் பணி போன்ற தலைப்புகளை மையமாகக் கொண்டு இச்செய்தி மடல் வெளிவந்துள்ளது.




## அகில இலங்கை சிறுவர் சித்திரைப்போட்டி 2013

சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமான கருத்தியலை சிறுவர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அகில இலங்கை மட்டத்தில் சிறுவர் சித்திரைப் போட்டிகளை நடாத்தியது. 4 வயது மட்டங்களின் கீழ் 4 தொனிப்பொருள்களின் அடிப்படையில் இந்த அகில இலங்கை சிறுவர் சித்திரைப் போட்டி நடாத்தப்பட்டதுடன் அதற்கு நாடளாவிய ரீதியில் பெருந்தொகை யான சிறுவர்கள் தமது பங்களிப்பை வழங்கினார்கள். வெற்றியாளர்களுக்கு அகில இலங்கை மற்றும் மாவட்ட மட்டத்தில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





**உள சமூக நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கும் உள சமூக பிரிவினால் 2013ம் ஆண்டில் நாட்டின் சிறுவர்களின் உச்சமட்ட நலனைக் கருதி பல பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சிகள், செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள், மற்றும் கருத்திட்டங்கள் நடாத்தப் பட்டன. 2013ம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2836 உள சமூக சேவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மனோநிலையை மதிப்பீடு செய்தல், உளவள ஆலோசனை மனநல சிகிச்சைகள் சார்ந்ததாக 567 சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்காக வருகை தருகின்ற பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அவ்வாறான ஒளிப்பதிவு சாட்சியங்களை வழங்கும் பணியை செவ்வனே மேற்கொள்ளக்கூடிய வகையில் மனநிலையை தயார் படுத்துவதும் அதிகாரசபையின் உளசமூக பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2013ம் ஆண்டின் அவ்வாறான 152 உள ரீதியிலான மனோநிலை தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக நேரடியாகவும் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை ஊடாகவும் அறிக்கையிடப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் சம்பந்தமாக மாவட்ட உளசமூக உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மற்றும் பிராந்திய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக உளசமூக நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தலும் அவ்வாறான முறைப்பாடுகளுக்கு ஏற்புடைய பொருத் தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உளசமூக பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.



**பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளசமூக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல்**

இலங்கை சிறுவர் பாதுகாப்பு வரலாற்றில் புதியதொரு திருப்புமுனையை பதிவுசெய்யும் வகையில் பிரதேச செயலக மட்டத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளசமூக உத்தியோகத்தர்கள் 360 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆரம்பகட்ட படி முறையை அமுல்படுத்தி 2013ம் ஆண்டில் அதிகாரசபைக்கு பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளசமூக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி மிகவும் வினைத்திறன் மிக்கவகையில் சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்புக்கு ஏற்புடைய பல்வேறு தலைப்புகளையொட்டி ஆய்வுகளை நடாத்துதல்

2013ம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக பின்வரும் 3 தலைப்புகளுக்கு ஏற்புடையதாக ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

- சிறுவர் வஞ்சக்கடத்தலுக்கு எதிரான சட்டங்கள் வினைத்திறன் அற்றதாக செயற்படுவதற்கான காரணங்கள் யாவையென உறுதிப்படுத்திக்கொள்வதற்கான ஆய்வு
- பாடசாலைகளில் வழங்கப்படும் உளவள ஆலோசனைகளின் தரத்தை கண்டறிதல் பற்றிய ஆய்வு
- பிள்ளைகளின் பாதுகாப்பு சார்ந்த கல்வி சம்பந்தமாக தற்போது நிலவும் நிலை யாதென நிர்ணயித்தல் சம்பந்தமான ஆய்வு
- இவற்றின் அடிப்படை நோக்கம் சிறுவர் வஞ்சக்கடத்தலை தடுத்தல் (Child Trafiking) பற்றிய சட்டங்களை மிகவும் வினைத்திறன் வாய்ந்த வகையில் அமுல்படுத்துவதற்கு விதப்புரைகளை வழங்குதல், பாதுகாப்பு சார்ந்த கல்வி பற்றிய திறன்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் அறிவுதிறன் மனப்பாங்கு போன்றவற்றை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை விதப்புரை செய்தல், பாடசாலைகளில் வழங்கப்படும் உளவள ஆலோசனை சேவைகளின் தரத்தை இனங்காணுதலும், அச்சேவைகளை விருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கு விதப்புரைகளை வழங்குதல் ஆகியவவைகளாக அமைகின்றன.

### திரிதரு சுரக்கும் பியச வள நிலையத்தைப் பேணி வருதல்




திரிதரு சுரக்கும் பியச வள நிலையத்தின் ஊடாக நாட்டின் சிறார்களுக்கு பாரியளவிலான பணிகள் கிட்டுகின்றன. குறிப்பாக பெற்றோர் வெளிநாட்டுக்கு செல்வதாலும் தாய் தந்தை இருவரும் தொழிலுக்கு செல்வதாலும் ஏற்படுகின்ற பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்படுகின்ற பிள்ளைகளுக்கு பாதுகாப்பை வழங்குவதை நோக்காகக் கொண்டு இந்நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இந் நிலையங்கள் ஊடாக சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழித்தல், சிறுவர்களுக்கான பாதுகாப்பு நடைமுறைகளைப் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், உள சமூக செயற்பாடுகள், ஆளுமை விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், கலை, இலக்கிய ரசணைகளை மேம்படுத்து வதற்கான செயற்பாடுகள், பரீட்சை செயற் பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச் சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இந் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள்

- குருநாகல் மாவட்டத்தின் இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிம்புள் வானாஓய குடியேற்றத்தில் வெளிநாடு சென்றுள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்காக நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளது.
- அநுராதபுர மாவட்டத்தில் விஜயபுர குடியேற்றத்தில்
- புத்தளம் மாவட்டத்தில் தப்போவ புத்தி மீன்பிடி கிராமத்தில்
- அம்பாறை மாவட்டத்தில் கல்முனை இஸ்லாமாபாத் சுனாமி வீடமைப்புத்தொகுதியில்

**சிறுவர் மைய நிலையங்கள்**

சிறுவர் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு செயற்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்தலும் சிறுவர் உளவள ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை சிறுவர் மைய நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அதிகாரசபையினால் 2009ம் ஆண்டு 1வது சிறுவர் மைய நிலையம் வவுனியா மாவட்ட செயலக வளவில் நிறுவப்பட்டதையடுத்து மாவட்ட செயலகங்களின் வளவுகளில் சிறுவர் மைய நிலையங்களை நிறுவும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

2013ம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுவர் மைய நிலையமொன்று நிறுவப்பட்டதுடன் தற்போது வவுனியா, கிளிநொச்சி, அம்பாந்தோட்டை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேற்படி சிறுவர் மைய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**சுரகி பியச சிறுவர் பாதுகாப்பு நிலையம்**

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உச்சமட்ட நன்மையின்பால் செயற்படும் பொருட்டு 1998ம் ஆண்டின் 50ம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் 14 (உ) மற்றும் (ஒ) பிரிவுகளின் பிரகாரம் செயலாற்றி அவர்களின் பாதுகாப்பிற்காக புறம்பான இடமொன்றை தேசிய சிறுவர் அதிகாரசபை பேணி வருகின்றது. இங்கு பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பாதுகாப்பாக பேணி அவர்களின் உரிமைகளை உச்சமட்டத்தில் பாதுகாத்து அவர்களுக்கு தேவையான உளசமூக ஒத்துழைப்பினை வழங்கி அவர்களின் மனோநிலையை ஆரோக்கியமான தன்மையில் பேணி உரிய ஆளுமையுடன் கூடிய சிறுவர்களை சமூகத்தில் ஒழுங்கிணைப்பதற்கு தேவையான அடிப்படை இங்கு உருவாக்கப்படுகின்றது. இந்த திட்டத்தின் கீழ் 2013ம் ஆண்டில் 95 சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுரகி பியச சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில் உள்ள சிறுவர்களின் கல்வித் தேவைகளை ஆராய்ந்தறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை வரைபினை வெளியிடுதல்

சிறுவர்களின் பெறுமதியினை நன்குணர்ந்து அவர்களுக்கு மாண்புமிக்கதொரு சிறுவர் பராயத்தை பெற்றுத்தருவதை நோக்காகக் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை வரைபு 2013ம் ஆண்டு வெளியிடப்பட்டது. சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்புகளுக்கும் ஏற்புடைய முறையான வழிகாட்டல்களுடன் கூடிய கொள்கையொன்று பேணி வரப்படுவதின் தேவை இனங் காணப்பட்டதையடுத்து அதற்கு வழிசமைக்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையினால் இக்கொள்கை வரைபு ஆக்கப் பட்டது. சிறுவர் துஷ்பிரயோகங் களை தடுத்து துஷ்பிரயோகங் களின் போது அதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள் ளுதல் நியாயத்தை பெற்றுத் தரும் வழிமுறைக்குள் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் பாதிக்கப்பட்டவர்களின் பாது காப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் அவர்களை மீள சமூகத்தில் ஒருங்கிணைத்தல், சிறுவர்களின் பாதுகாப்புடன் ஏற்புடைய விடயங்கள் சம்பந்தமாக புதிய தர நியமங்களை இக்கொள்கைக்குள் உள்ளடக்குதல் இவ்விடயத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



## சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல்களும், தரங்களும் உள்ளடக்கப்பட்ட வரைவினை வெளியிடுதல்

தேசத்தின் அனைத்து சிறார்களின் பாதுகாப்பும் ஒரே மாதிரியாக உறுதிப்படுத்தப்படுவதை நோக்காகக் கொண்டு சிறுவர் நேயமிக்க சூழமைவுக்குள் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ள பிள்ளைகளின் உச்சமட்ட நன்மையை உறுதிப்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வழிகாட்டலின் கீழ் புலமைசாலிகளைக் கொண்டதொரு குழுவின் பங்களிப்புடன் ஆக்கப்பட்ட ஒரு வரைபொன்று சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல்களும் தரங்களும் உள்ளடக்கப் பட்டதாக 2013ம் ஆண்டு வெளியிடப்பட்டது.






## 1939ம் ஆண்டின் 48ம் இலக்க சிறுவர் மற்றும் இளைஞர்கள் கட்டளைச்சட்டத்தை திருத்துவதற்கான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

நீதிமன்றத்தின் முன் தோன்றுகின்ற சிறுவர்களுக்கு கிடைக்கின்ற சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் காப்பினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் சிறுவர் உரிமைகள் பட்டையத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் அளவினை அண்மித்துக் கொள்வதற்காக இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த திருத்தங்கள் சார்ந்த புதிய வரைபு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தற்காலத்திற்கு ஏற்றவகையில் மாற்றியமைத்து 2013ம் ஆண்டில் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## விசேட பொலிஸ் விசாரணை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சட்டவாக்க சபையினால் அதாவது பாராளுமன்றத்தினால் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட 1998ம் ஆண்டின் 50ம் இலக்க சட்டத்தில் சாட்டப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக விசேட விசாரணைகளை நடாத்து வதற்காக 2001ம் ஆண்டு இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசாரணை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவரையும், மற்றுமொரு உத்தியோகத்தரையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேண்டுகோளுக்கிணங்க பொலிஸ்மா அதிபரினால் இணைக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தில் விசேட விசாரணைகளை நடாத்துவதற்கு கிடைத்திருக்கின்ற தத்துவங்களுக்கேற்ப புலன் விசாரணைகளை நடாத்தும் பணிகள் வெற்றியடைந்ததுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துஷ்பிரயோகிகளை சட்டத்தின் வலைக்குள் சிக்கவைத்துக் கொள்ளும் விடயம் வெற்றிகரமாக இடம்பெற்றதுடன் உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் துஷ்பிரயோகிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
இந்த புலன்விசாரணைகளை விரிவாக்கும் பொருட்டு 2002ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ம் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு ஒன்று 15 உத்தியோகத்தர்களை கொண்டதாக நிறுவப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையினூடாகவும் வேறு முறைகள் ஊடாகவும் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகம் சார்ந்த முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்தலும் இவ்விசாரணைகளை சுயாதீனமாக மேற்கொண்டு சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் இப்பிரிவின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளை துரிதமாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தி துரிதமாக அது சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இவ்விடயத்தில் விசேட தன்மை வாய்ந்ததாக புலனாகின்றது.

இப்பணியை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு 24 மணி நேரமும் செயற்படக்கூடிய உத்தியோகத்தர் குழுவொன்று இப்பிரிவின் கீழ் பணியாற்றுகின்றார்கள். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிய பிள்ளைகளின் வீடியோ சாட்சியங்களை பதிவுசெய்யும் பணிக்கும் விசேட பொலிஸ் விசாரணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பினை வழங்குகின்றனர். 2013ம் ஆண்டு விசேட பொலிஸ் விசாரணைக்குழுவிற்கு மாத்திரம் 198 முறைப்பாடு களும் தகவல்களும் கிடைத்துள்ளன. 2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆகின்றபோது 33 உத்தியோகத்தர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணைப்

பிரிவில் இணைந்து பணியாற்றுவதுடன் அவர்கள் நாடளாவிய ரீதியில் விசாரணைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிப்படையும் சிறுவர்களின் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு மூலமாக ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட பிரிவொன்று செயற்படுகின்றது. 1999ம் ஆண்டின் 32ம் இலக்க சாட்சியங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் படி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ள பிள்ளையொன்றின் சாட்சியத்தை வீடியோ வழியாக ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு இதனூடாக தத்துவம் கிடைக்கின்றது. 2013ம் ஆண்டில் இவ்வாறாக 159 வீடியோ சாட்சியங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

## சிறுவர் துஷ்பிரயோகம் சார்ந்த வழக்குகளுக்கான மரபணு பரிசோதனை

இது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மிகவும் தனித்துவமான விடயமாகும். நாட்டில் பொலிஸ் நிலையங்களில் இருந்து அதிகாரசபைக்கு கிடைக்கின்ற வேண்டுகோளுக்கிணங்க நீதிமன்ற கட்டளையின் பேரில் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் சந்தேக நபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக மரபணு பரிசோதனைகளை செய்வதற்கு தேவையான நீதி ஏற்பாடுகள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## சட்ட நடவடிக்கைகள்

1998ம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கிணங்க துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ள பிள்ளைகளை பாதுகாப்பதற்காக அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக சட்ட நிர்வாகம் அல்லது வேறு திருத்தங்களை விதந்துரைத்தல், சிறுவர் துஷ்பிரயோகத்துடன் ஏற்புடைய சட்டங்களை அமுல்படுத்தல், ஒழுங்குபடுத்துதல், சட்ட ஆலோசனைகளை வழங்குதல், சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அதற்கு ஏற்புடைய வகையில் நீதிமன்றங்களில் தோன்றுதல் போன்ற படிகள் சட்டப்பிரிவினாலே மேற்கொள்ளப்படுகின்றது. அதிகாரசபையின் சட்டத் திற்கு மேலதிகமாக மற்றும் சில சட்டங்கள் ஊடாகவும் அதிகாரசபைக்கு இதற்கான சில தத்துவங்கள் கிடைக்கின்றன.

- 2006ம் ஆண்டின் 16ம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்
- 2005ம் ஆண்டின் 34ம் இலக்க வீட்டு வன்முறைகளை தடுப்பதற்கான சட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கும் சட்டப்பிரிவினால் 2856 சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. 2013ம் ஆண்டில் 248 தடவைகள் இப்பிரிவின் உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றங்களில் தோற்றியிருக்கின்றார்கள். அதிகாரசபைக்கு புறம்பாக நடைபெற்ற 36 கூட்டங்களிலும் இவர்கள் பங்கேற்றுள்ளதுடன் 41 ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துவதற்கும் இப்பிரிவின் உத்தியோகத்தர்கள் தங்களது பங்களிப்பினை நல்கியுள்ளனர்.

**2012 ஆம் ஆண்டில் சட்டப்பிரிவு பங்களிப்பு வழங்கிய வழக்குகளின் எண்ணிக்கை (2005 ஆம் ஆண்டின் 16ம் இலக்க விசேட சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கேற்ப**

| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றம் | 23 |
| காலி நீதவான் நீதிமன்றம் | 34 |
| கல்முனை நீதவான் நீதிமன்றம் | 59 |
| பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றம் | 13 |
| மாத்தறை நீதவான் நீதிமன்றம் | 25 |
| அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் | 72 |
| களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 01 |
| **மொத்தம்** | **227** |

**2013ம் ஆண்டில் சட்டப்பிரிவு பங்களிப்பு வழங்கிய வழக்குகளின் எண்ணிக்கை (சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் சார்பில்)**


| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| உயர் நீதிமன்றம் | 05 |
| கொழும்பு மேல் நீதிமன்றம் | 01 |
| காலி நீதிமன்றம் | 01 |
| கொழும்பு நீதவான் நீதிமன்றம் | 02 |
| அல்பிட்டிய நீதவான் நீதிமன்றம் | 01 |
| குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றம் | 01 |
| கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 06 |
| கெஸ்பாவ நீதவான் நீதிமன்றம் | 02 |
| கண்டி நீதவான் நீதிமன்றம் | 01 |
| **மொத்தம்** | **21** |

## சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுககள் பலவழிகளில் கிடைக்கின்றன. 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையினூடாக பெருமளவு முறைப்பாடுகள் கிடைக்கின்ற அதேவேளை அதிகாரசபைக்கு வருகை தந்து வாய்மூலமாக முறைப்பாடு செய்வதினூடாகவும் கடிதங்கள் ஊடாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த முறைப்பாடுகள் யாவும் துரிதமாக விசாரணை செய்யப்படுவதுடன் முறைப்பாட்டின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தல்களும் இடம்பெறுகின்றன. 2013ம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 10279 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் பெருமளவிலான முறைப்பாடுகள் சிறுவர் வன்முறை சம்பந்தமாக அறிக்கையிடப்பட்டுள்ளன.

இவ்வாறான அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2030 ஆகும். கட்டாயக்கல்வியை வழங்காமை சம்பந்தமாக 1263 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் சிறுவர் மற்றும் இளைஞர்கள் கட்டளைச்சட்டத்திற்கேற்ப புறக்கணித்தல் சம்பந்தமாக 1101 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பாலியல் வல்லுறவு சம்பந்தமாக 691 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 681 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் பாலியல் வல்லுறவு சம்பந்தமாக 400 முறைப்பாடுகளும் 2013ம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்துள்ளன. இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட 10273 முறைப்பாடுகளில் 9427 முறைப்பாடுகள் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையினூடாக கிடைக்கப்பெற்றமை விசேடமானதாகும். வேறு வழிகளினூடாகவும் 846 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

**2013ம் ஆண்டில் அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக முறைப்பாடுகளின் எண்ணிக்கை (மாவட்ட அடிப்படையில்)**



## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

### 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபாய்களில்)

| விபரம் | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| ***வருமானம்*** | | | |
| மீண்டெழும் கொடைகள் -திறைசேரி | | 89,651,116.00 | 49,362,000.00 |
| -ஏனைய நிறுவனங்கள் | 1A | 20,132,398.18 | 12,953,345.55 |
| ஏனைய வருமானம் | 1B | 6,968,432.76 | 1,264,617.87 |
| தேசிய செயற்றிற்த்தை அமுல்படுத்துதல் | | 23,400,000.00 | 7,190,000.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 1C | 4,170,642.69 | 1,681,263.14 |
| **மொத்த வருமானம்** | | **144,322,589.63** | **72,451,226.56** |
| ***செலவீனங்கள்*** | | | |
| தனிப்பட்ட பணியூதியங்கள் | 2 | 69,882,714.01 | 39,941,739.65 |
| பிரயாணச் செலவுகள் | 3 | 1,782,381.54 | 997,104.98 |
| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்களும். | 4 | 3,818,999.76 | 2,630,004.07 |
| பராமரிப்பு | 5 | 3,654,490.46 | 2,376,196.00 |
| ஒப்பந்தவியல் சேவைகள் | 6 | 9,095,417.70 | 6,710,020.02 |
| தேய்மானம் | 7 | 7,386,630.87 | 6,896,720.34 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவினங்கள் | 8 | 4,461,531.45 | 316,472.07 |
| தேசிய செயற்றிட்ட அமுலாக்கம் | 9 | 18,192,725.29 | 6,436,898.56 |
| கருத்திட்ட செலவினங்கள் | 10 | 23,769,207.01 | 15,343,497.00 |
| சுனாமி உதவிக் கருத்திட்டம் - செலவினங்கள் | 11 | 158,076.00 | 158,076.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் - செலவினங்கள் | 12 | 3,568,542.48 | 2,066,360.00 |
| நிதியியல் செலவினங்கள் | 13 | 12,805.07 | 6,740.00 |
| **மொத்த செலவினங்கள்** | | **145,783,521.64** | **83,879,828.69** |
| **ஏற்புடைய காலத்திற்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)** | 14 | **(1,460,932.01)** | **(11,428,602.13)** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

### 2013 டிசம்பர் 31 தேதியுள்ளவாறு நிதிசால் நிலைமை

(ரூபாய்களில்)

| விபரம் | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 15 | 54,581.58 | 6,190,049.88 |
| கிடைக்கப்பெறவேண்டிய கணக்குள் | 16 | 2,936,740.80 | 14,598,419.30 |
| பொருட்பதிவேடுகள் (காகிதாகதிகள்) | | 84,990.37 | 91,104.06 |
| முற்கொடுப்பனவுகள் | 17 | 27,708.05 | 550,960.72 |
| இடர்கடன் மீள் செலுத்தல்கள் | | 70,734.14 | 340,010.57 |
| | | **5,074,754.94** | **21,770,544.53** |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| கிடைக்கப்பெறவேண்டியவைகள் | 18 | 39,789.88 | 370,513.45 |
| முதலீடு/சேமிப்பு | 19 | 4,233,527.05 | 22,367,914.84 |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 20 | 2,320,831.86 | 94,996,317.63 |
| | | **116,794,148.79** | **117,734,745.92** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **141,868,903.73** | **139,505,290.45** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| செலுத்தவேண்டிய கணக்குள் | 21 | 1,501,776.82 | 5,406,372.93 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 22 | 62,327.14 | 815,608.57 |
| | | **12,464,103.96** | **6,221,981.50** |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| நீண்டகால ஏற்பாடுகள் | | 2,619,501.87 | 2,031,945.00 |
| வரையறுக்கப்பட்ட நிதியம் | 23 | 528,404.00 | 1,762,904.00 |
| முன்னெடுத்துச் செல்லப்பட்ட திட்டங்களின் மீதி அல்லது குறைவு | 24-A | 11,638,386.35 | 16,270,219.24 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 24-B | 144,157.69 | 940,829.48 |
| | | **14,930,449.91** | **21,005,897.72** |
| **முழு பொறுப்புகள்** | | **27,394,553.87** | **27,227,879.22** |
| | | | |
| **தேறிய சொத்துக்கள்** | | **114,474,349.86** | **112,277,411.23** |
| **மொத்த பொறுப்புகள்** | | | |
| முன்னெடுத்துச் செல்லப்பட்ட மீதி அல்லது குறைவு | | (32,832,134.31) | (24,336,856.49) |
| கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள் | | (3,834,913.98) | |
| மீதி/குறைவு 2013 | 14 | 1,731,852.61 | (8,495,277.82) |
| முன்னெடுத்துச் செல்லப்பட்ட மீதி அல்லது குறைவு | | (34,935,195.68) | |
| மொத்த பொறுப்புகள் | 25 | 134,256,426.54 | 129,956,426.54 |

| | | | |
|---|---|---|---|
| மூலதன ஒதுக்கல்கள் | | 2,153,119.00 | 2,153,119.00 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கல்கள் | | 13,000,000.00 | 13,000,000.00 |
| | | **114,474,349.86** | **112,277,411.23** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

### 2013 ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வு கூற்று

(ரூபாய்களில்)

| விபரம் | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப்பாய்வு** | | | |
| மிகை/ (பற்றாக்குறை) சாதாரண நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட மீதி (குறை) | | (1,460,932.01) | (11,428,602.13) |
| **நிதியல்லாத அசைவுகள்** | | | |
| தேய்மானம் | 20 | 7,714,034.67 | 7,668,381.89 |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | 6,095,403.89 | 4,095,174.72 |
| குறுங்கால் ஏற்பாடுகளின் அதிகரிப்பு | | 146,718.57 | 571,305.98 |
| தொகைக் குறைவு | | (93,886.31) | 57,346.01 |
| கிடைக்கவேண் கணக்குகளின் அதிகரிப்பு | | (8,338,321.50) | (8,832,333.51) |
| முற்கொடுப்பனவு அதிகரிப்பு | | (76,747.33) | (259,528.99) |
| இடர் கடன்களில் குறைவு | | (130,723.57) | (125,355.98) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட நிகர நிதி மட்டம்** | | **3,855,546.41** | **(8,253,612.01)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட முழு நிதி மட்டம்** | | | |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் | | (5,038,548.90) | (30,388,474.00) |
| நீண்டகால பெறுகைளின் குறைவு | | 130,723.57 | 125,355.98 |
| முதலீட்டு நடவடிக்கைகள் | | - | 13,000,000.00 |
| முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட முழு நிதி மட்டம் | | (1,865,612.21) | (1,066,672.05) |
| **நிதி நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட நிதி மட்டம்** | | **(6,773,437.54)** | **(18,329,790.07)** |
| **நிதிச் செயற்பாடுகளினால் விளைந்த காசுப் பாய்வு** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகளின் அதிகரிப்பு | | 587,556.87 | 449,205.00 |
| வரையறுக்கப்பட்ட நிதியங்களில் அதிகரிப்பு அல்லது குறைவு | | (1,234,500.00) | (250,000.00) |
| மூலதன கொடைகளிலிருந்து வரவுத் தொகை | | 4,300,000.00 | 21,360,000.00 |
| பிரதான நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்களில் அதிகரிப்பு | | (6,070,634.04) | 3,470,829.81 |
| | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளினால் விளைந்த நிகர நிதி மட்டம்** | | **(2,417,577.17)** | **25,030,034.81** |
| | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனான நிகர அதிகரிப்பு மற்றும் குறைப்புகள் | | (5,335,468.30) | (1,553,367.27) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 6,190,049.88 | 7,743,417.15 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்** | **15** | **854,581.58** | **6,190,049.88** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } வைஎஸ்/ஈ/என்சீபீஏ/2013/1/05
මබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2015 ஆகஸ்ட் 24

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 22(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2014 நவம்பர் 12 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

2

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக்கூற்று வருமானக்கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) <u>இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01</u>

(i) நிதிக்கூற்றுக்களுடன் தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் செயற்திட்டங்களில் முன்னைய ஆண்டில் இடம்பெற்ற கணக்கீட்டு வழுக்களான முறையே ரூபா 4,908,996 தொகை, ரூபா 1,398,772 தொகை மற்றும் ரூபா 714,024 தொகைக்குரிய காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் பிரசுரிக்கப்பட்டமை பின்னோக்கி சீராக்கி சமர்ப்பிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் முன்கொண்டு வரப்பட்ட வருமானத்தில் தேறிய விளைவு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) <u>இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07</u>

முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 25,893,649 கிரயத்திலான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற போதும், அதன் நியாயமான பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்காக சொத்துக்கள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

அதிகாரசபை அரசின் மானியங்களைக் கொண்டு நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்து வருவதுடன் மீளாய்வாண்டில் ரூபா 134 மில்லியன் அரச மானியங்கள் மற்றும் ரூபா 92 மில்லியன் நிலையான சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், சொத்துக்களுக்கு காலக்கழிவு செய்வதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக அதிகாரசபையால் முறையான கணக்கீட்டு முறைமையொன்று பேணப்பட்டிருக்க வேண்டிய போதிலும், நாட்குறிப்பு பதிவுகள் மூலம் பேரேட்டில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டமையால் பேரேட்டுக் கணக்குகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதுள்ளது.

i. வழுக்களைத் திருத்துவதற்காக 12 கணக்குகளுக்குரிய நடைமுறைச் சொத்துக் கணக்குகள் ரூபா 593,522 ஆலும் செலவினக் கணக்குகள் ரூபா 223,892 ஆலும் அங்கீகாரமின்றி அழித்து மாற்றப்பட்டிருந்தன.

ii. நாட்குறிப்பு பதிவுகள் பயன்படுத்தாமல் ரூபா 9,991,399 பெறுமதியான முற்பணத் தீர்ப்பனவுகள் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

iii. அதிகாரசபையின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் போது ரூபா 391,914,146 பெறுமதியான 107 நாட்குறிப்பு பதிவுகள் இடப்பட்டிருந்த போதிலும் அதற்காக எதுவித அங்கீகாரமொன்றும் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்டகாலமாக கிடைக்க வேண்டிய மீண்டெழும் மானியங்களாக காண்பிக்கப்பட்ட ரூபா 3,541,000 தொகையை பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டின் சீராக்கமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப்பதிவழிப்பிற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5

2.2.4 கணக்காய்வுக்கான சான்றின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 184,900 ஆன இருப்பின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 16,805 ஆன உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | தெரிவுப் பரிசோதனையின் போது எட்டு உத்தியோகத்தர்கள் பொது 169 மருத்துவ பரிசோதனை அறிக்கைகளை சமர்ப்பித்திருக்க வில்லை. |
| (ii) IV ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பிரிவு | அரச சேவைகள் சேமலாப நிதிய இலக்கம் மற்றும் பங்களிப்புத் தொகை கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட திகதி என்பன தனிப்பட்ட கோவைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

6

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 165(2) | காசோலைகள் மற்றும் பணப்பெறுவனவு, காசுக்கட்டளை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 184 | ரூபா 5,326,984 பெறுமதியான பணப் பெறுவனவிற்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 267 | அதிகாரசபையால் சம்பளம் மற்றும் வேதனங்களைச் செலுத்தும் போது பெறுபவரின் கையொப்பமோ அல்லது பற்றுச்சீட்டொன்றோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 323(1) | அரசின் நிதி தனிப்பட்ட கணக்குகளில் வைப்புச் செய்ய முடியாத போதிலும் ரூபா 521,300 கூட்டுத்தொகையான செயல் நிமித்த முற்பணம் 12 தனிப்பட்ட கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. |
| (v) | நிதிப்பிரமாணம் 1(2) (இ) | 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2,279,733 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | உத்தியோகத்தரொருவருக்கு ஒரு தடவையில் பெற்றுக்கொள்ளக்கூடிய முற்பணத் தொகை ரூபா 20,000 ஆன எல்லை ரூபா 100,000 வரை அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் ரூபா 100,000 ஐயும் விஞ்சி 03 சந்தர்ப்பங்களில் ரூபா 364,320 கூட்டுத் தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (vii) நிதிப்பிரமாணம் 1646 | 07 வாகனங்கள் தொடர்பாக வாகன சம்பவக் குறிப்பேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு மீதிகள் சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| (உ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 1,460,932 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,428,602 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 9,967,670 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. பொதுத் திறைசேரியிடமிருந்து மீளாய்வண்டிற்காக கிடைக்கப்பெற்றிருந்த ஏற்பாடு ரூபா 16,210,000 ஆல் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 114,474,350 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்களான ரூபா 112,277,411 உடன் ஒப்பிடுகையில் ரூபா 2,196,939 அதாவது 1.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 12,610,551 ஆகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 15,548,563 உடன் ஒப்பிடுகையில் ரூபா 2,937,912 அதாவது 18 சதவீத குறைவொன்றாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை என்பவற்றின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக எதிர்பார்த்த இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

i. அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 05 ஐ நடாத்துவதற்கு ரூபா 0.80 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 0.42 மில்லியன் செலவு செய்து 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

ii. கண்காட்சிகள் மற்றும் 80 நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1 மில்லியனில் ரூபா 0.93 மில்லியன் செலவு செய்து 20 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

iii. 02 சிறுவர் கேந்திர நிலையங்களை தாபிப்பதற்கு ரூபா 02 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான நிலையங்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபைக்கு 23,767 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதில் 8,130 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டிருந்த போதிலும், தீர்வு வழங்காமல் முன்கொண்டு செல்லப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 15,637 ஆக இருந்தன. அதிகாரசபைக்கு இரண்டு வருடங்களாக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அவ்வாண்டில் தீர்வு வழங்கப்பட்டதன் காரணமாக தீர்வு வழங்கப்படாமல் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் துரித அதிகரிப்பொன்று காணப்படுவதுடன், வருடாந்தம் அதிகாரசபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்கு முறையான நடைமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படாமையால் இவ்வாறான நிலைமை உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக ரூபா 4.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 3.45 செலவிடப்பட்டு 03 ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ்வறிக்கை அதிகாரசபையின் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்திட்ட முகாமைத்துவ நலிவுகள்

அதிகாரசபையின் 09 செயற்திட்டங்களுக்காக முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்த பணத்திற்குரிய செயற்பாடுகளுக்காக செலவு செய்யாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 11,638,386 கூட்டுத்தொகை சேமிப்பாக இருந்தமையால் செயற்திட்ட முகாமைத்துவம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

10

4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) பெற வேண்டிய மீண்டெழும் மானியக் கணக்கில் இருந்த ரூபா 3,541,000 ஆன மீதியை ஆராய்து பார்க்காமல் மீளாய்வாண்டின் மிகை பற்றாக்குறை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன விபத்துகளினால் ஆண்டினுள் மேற்கொள்வதற்கு நேர்ந்த பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 1,113,376 தொகை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 834,912 தொகையாக இருந்தமையால் வேறுபாடான ரூபா 278,824 தொகையை பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

உத்தியோகத்தர்களைச் ஆட்சேர்ப்பதற்காக பத்திரிகை அறிவித்தலை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட தவறொன்றின் காரணமாக அது இரண்டு முறை பிரசுரிக்கப்பட்டதால் ரூபா 29,568 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 510 ஆகவும் உள்ளவாறான பதவியணியினர் 331 ஆக இருந்ததுடன் 179 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) நி.பி 453(ஏ) பந்தியின் பிரகாரம் முழுமையான பதவியணியினர் நிருவாகம் தொடர்பான அறிக்கை தாபன பிரிவில் சரியாக பேணப்பட வேண்டிய போதிலும், தாபனப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் மாதாந்த பதவியணியினர் தகவல்களுடன் கணக்குப் பிரிவின் உள்ளபடியான சம்பளம் செலுத்தப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கைக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு சமனாக இருக்கவில்லை.

## 4.6 வாகன நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது 03 வாகனங்கள் விபத்திற்குட்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நி.பி 104 (1),(3),(4) இன் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப பரிசோதனை நடாத்தி ஆரம்ப அறிக்கை, முழுமையான அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நி.பி 110 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன், அதில் விபத்துக்கள் / சேதங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் இதுவரை இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பாகவும் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 03 விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதிகாரசபையால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 12 மாதங்கள் தாமதித்து 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக 2012 – 2017 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் நலனை அடைந்துகொள்ளும் இலக்கிற்காக குறிப்பான காலப்பகுதி

இனங்காணப்பட்டிருக்காமையால் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிட முடியாதிருந்தது.

## 5.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) இரண்டு செயற்திட்டங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 2,510,672 பெறுமதியான நூறு சதவீதம் பெறுமானத் தேய்விடப்பட்டு பாவனையில் காணப்படுகின்ற சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்தல்.

(ஆ) அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தொகையை தீர்ப்பதற்காக நீண்டகால தாமதம் காணப்பட்டமை மற்றும் அவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை

(இ) கணக்குப் புத்தகங்கள் பராமரித்துச் செல்வதிலுள்ள குறைபாடுகளை சீராக்குதல்

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) முற்பணங்களைத் தீர்த்தல்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ශ්‍රී ලංකා ළමා දුරකතන සේවය
இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை
ChildLine Sri Lanka
1929


**ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය**

අංක 330, තලවතුගොඩ පාර, මාදිවෙල, ශ්‍රී ජයවර්ධනපුර, කෝට්ටේ.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

இல. 330, தலவத்துக் கொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.

**National Child Protection Authority**

**No.330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawadenapura, Kotte.**

දුරකථන / தொலைபேசி இல / **Telephone :** 0112778911-14

ෆැක්ස් / தொலைநகல் / **Fax :** 0112778915

විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / **Email :** ncpa@childprotection.gov.lk

වෙබ් අඩවිය / இணையத்தளம் / **Web Site:** www. childprotection.gov.lk